
# லியோ டால்ஸ்டாய்

## (நாடகம்)



சு.சமுத்திரம்

கங்கை புத்தக நிலையம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# லியோ டால்ஸ்டாய்

(நாடகம்)

சு. சமுத்திரம்

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : ஜூலை 1987
இரண்டாம் பதிப்பு : (கங்கை) டிசம்பர், 2003

விலை : ரூ. 30.00

| | | |
|---|---|---|
| ☼ Title | : | **LEO TOLSTOY** |
| ☼ Compiled by | : | **Su. Samuthiram** |
| ☼ Subject | : | Drama |
| ☼ Language | : | Tamil |
| ☼ Edition | : | Second Edition, December, 2003 |
| ☼ Pages | : | xxii + 74 = 96 |
| ☼ Publication | : | **Gangai Puthaka Nilayam**<br>23, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>Chennai - 600 017. |
| ☼ Price | : | **Rs. 30.00** |

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை – 600 014.
Printed At : Malar Printers 044-8224803

# முகவுரை

என் நண்பர் திரு. சு. சமுத்திரம் அவர்கள் தமிழ் இலக்கியம் படைக்கும் துறையில் விரைவாகப் புகழ் ஈட்டிவரும் நல்ல எழுத்தாளர். சில ஆண்டுகளாக அவரையும் அவருடைய எழுத்துப் படைப்புக்களையும் அறிந்தவன் என்ற முறையில் அவர் எழுதியுள்ள 'லியோ டால்ஸ்டாய்' என்ற நாடக நூலுக்கு மிக்கமகிழ்ச்சியுடன் இந்த நூன்முக உரையை எழுதுகிறேன்.

திரு. சமுத்திரத்தின் கவிதைகளையும், சிறுகதைகளையும், தொடர்கதைகளையும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நாடகங்களையும் அறிந்தவர்கள் பல்வேறு துறைகளில் உள்ள மனிதர்களின் தன்மைகளையும் எண்ணங்களையும் பேச்சுக்களையும் செயல்களையும் அவர் எவ்வளவு நுணுக்கமாகவும் உன்னிப்பாகவும் கவனிக்கிறார், கிரஹித்துக் கொள்கிறார்- தம் எழுத்து வன்மையினால் உருக்கொடுத்து உலாவ வைக்கிறார் என்

பதை உணர்ந்திருப்பார்கள். 'போதும் உங்கள் உபகாரம்' என்ற அவரது சிறுகதை 'குமுதம்' வார இதழில் வெளியாகி 'இலக்கியச் சிந்தனை' மதிப்பீட்டு அமைப்பினால் அம் மாதத்தில் வெளிவந்த தமிழ்ச் சிறுகதைகளுள் மட்டுமின்றி, அவ்வாண்டில் (1977) வெளி வந்த சிறுகதைகளுள் எல்லாமே தலைசிறந்த தாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்தக் கதையை மாதத்தின் சிறந்த கதையாக நான் தேர்ந்தெடுக்கையில், விமரிசக முறையில் அதைப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயும் வாய்ப்பைப் பெற்றேன். சமுதாயத் தில் மிக இழிந்து வறுமையில் நொடிந்த பாத்திரங்களைப் பற்றிய அந்தக் கதையில்-நடை நல்ல தெளிவுடனும், யதார்த்தமான வர்ணனைகள் உளி செதுக்கி உருவாகிய கற்சிற்பத்தின் தோரணையில் கச்சிதமாகவும், சொற்கோப்பும் உரையாடல்களும் தம் இயல்பு சற்றேனும் கெடாமலும் அமைந் திருக்கக் கண்டு வியந்தேன். இவை எல்லா வற்றிற்கும் மேலாக அந்தக் கதையில் மனித உணர்வு என்னும் பண்புநலம் கதையினுள்ளே கருவில் உதித்த திருவாக ஆழப் பொதிந்து இருந்த விதம் அலெக்ஸாந்தர் டூமாஸ் (Alexandre Dumas) வின் படைப்புக்களையும் ஆதிசங்கர பகவத்பாதர் 'மானீஷப் பஞ்சகம்' இயற்றிய சூழ்நிலையையும் எனக்கு நினைவு படுத்தியது.

'போதும் உங்கள் உபகாரம்' என்ற சிறுகதை உணர்த்திய மனிதாபமான உணர்வு திரு. சமுத்திரத்தை உயரிய அரிய இலக்கியப் படைப்பாளர்கள் வரிசையில் ஒருவராகச் சேர்க்கும். அந்த மனிதாபிமானம் தமது எழுத்துக் கலைக்காக அவர் கடையில் வாங்கி அவ்வப்போது போர்த்திக்கொள்ளும் சந்தர்ப் பப்போர்வை இல்லை. அவர் வாழ்வின் எண்ணங்களில், சொற்களில், செயல்களில், எல்லாவற்றிலும் மைய இழையாக அது திகழ்கிறது, அவரைப் படைத்து ஆட்டி வருகிறது. எனவேதான் அநீதியும் சுரண்டலும், மனிதர்களை மனிதர்கள் ஏமாற்றும் அற்ப வித்தைகளும் அவருக்குப் பொறுக்க முடியாத கொடுமைகளாகி அவரைக் குமுற வைக் கின்றன, அவர் எழுத்துக்களில் கொந்தளிக் கின்றன; அவற்றை உணர்ச்சிச் செந்தணலில் இட்டு வார்த்து எடுத்த சிறந்த இலக்கியமாக ஆக்குகின்றன.

இத்தகைய மனிதரான திரு. சமுத்திரம் ரஷ்யப் பேரறிஞரும் உலகம் புகழும் இலக் கியப் படைப்பாளரும் சிந்தனாவாதியுமான லியோ டால்ஸ்டாயின் வாழ்க்கையால் வசீ கரிக்கப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. டால்ஸ் டாய் நூற்றாண்டு விழா சென்னையில் கொண்டாடப்பட்ட போது, திரு. சமுத்திரம் அந்த விழாக்களில் பலவற்றை நடத்திய இந்தியா- சோவியத் ரஷ்யா நட்புறவு

அமைப்பின் செயலாளராக இருந்து வந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் டால்ஸ்டாயின் வாழ்க்கையின் முக்கியமான சில நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட நாடகம் ஒன்றைப் படைத்திடும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அந்த வாய்ப்பின் விளைவுதான் நீங்கள் உங்கள் கையில் இப்போது பிடித்திருக்கும் இந்த நூல்.

‘லியோ டால்ஸ்டாய்’ நாடகத்தை எழுதி வருகையில் திரு. சமுத்திரம் அடிக்கடி என்னைச் சந்தித்து வந்தார். எனவே இந்த நாடகத்திற்காக அவர் எவ்வளவு தூரம் தளரா முயற்சிகளை மேற்கொண்டு நூல்கள் பலவற்றைப் படித்துச் செய்திகள் திரட்டினார் என்பதை நான் அறிவேன். கையெழுத்துப் பிரதியாக இருந்த நிலையிலேயே இந்த நாடகம் திரு. பி.ஏ. கிருஷ்ணன் குழுவினரால் அரங்கேற்றப்பட்டது. அதன்பின் வானொலியில் ஒலிபரப்பவும் பட்டது. எனவே நூல் வடிவில் இதைப் பார்க்கும் உங்களில் சில பலர் இதை ஏற்கெனவே கண்டு கேட்டு இரசித்திருக்கக் கூடும்.

மைலாப்பூர் நுண்கலைக் குழு அரங்கில் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் இந்த நாடகத்தை நான் முதன் முறையாகப் பார்த்தபோது திரு. பி. ஏ. கிருஷ்ணன் டால்ஸ்டாயாகவும், தாம்பரம் லலிதா சோன்யாவாகவும் நடித்தனர். இரண்டு பாத்திரங்களும் மிகுந்த

வலுவுடனும் தெளிவுடனும் திகழ்ந்தது. அவர்கள் நடிப்பிற்கு எந்த அளவு சான்று பகர்ந்ததோ அதே அளவு திரு. சமுத்திரத்தின் படைப்புத் திறனுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்தது.

தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் படைத்தவர்களுக்கு அண்மைக் காலத்தில் வெளிவரும் பெரும்பான்மையான நாடகங்களின் போக்குக் கவலையைத் தருவதாக உள்ளது. பொழுதுபோக்கு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, விரசத்தையும் ஹாஸ்யத்தையும் இரு கோல்களாக நட்டு இவற்றினிடையே 'காசே கடவுள்' என்ற குறுகிய நோக்கைக் கயிறாகக் கட்டி அதன்மீது அபாயகரமாகக் கழைக் கூத்துக் காட்டும் படைப்புக்கள் நம் நாடக மேடைகளில் மலிந்து வருகின்றன. தனிமனிதன் பற்றியோ சமுதாயம் பற்றியோ சிந்திப்பவர்களுக்கு இந்தக் கூத்து அரங்கங்கள் இடம் தருவதில்லை. எனவேதான் எவ்வளவோ நாடகங்கள் எழுதப்பட்டும், அரங்கில் அவை வெற்றி பெற்றும், சில திரைப்படங்களாக உருவெடுத்தும், இலக்கியம் என்று பார்த்தால் அவை வெறுமையே நிறைந்து காண்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் திரு. சமுத்திரத்தின் 'லியோ டால்ஸ்டாய்' நாடகத்தை அணுகுபவர்கள் வெம்பாலைப்

பரப்பில் இனிய குளிர்ந்த தெளிவான நீர் தரும் சுனையென இதைக் காண்பார்கள். டால்ஸ்டாய் என்ற அரும் மனிதர் சமுதாயம் என்ற பெரிய சக்திக்கும் சுயநலமே உருவெடுத்தாற் போன்ற அவர் மனைவி சோன்யாவிற்கும் இடையே அகப்பட்டுக் கொண்டபோரை இந்த நூலில் காண்பார்கள். நாடகத்தின் உயிர்நாடி இந்தப் போர். சிக்கனத்துடனும் அழகுடனும் இது சித்திரிக்கப்பட்டுள்ளது. டால்ஸ்டாயின் உன்னதப் பணி முடிந்து அவர் வாழ்வு அடங்கும்போதும் அந்தப் போர் முடியாத ஒரு போர் என்ற உணர்வை எழுப்பித் திரைக்கு வழிவிடுகிறார் திரு. சமுத்திரம். கடைசிக் காட்சியில் லியோ டால்ஸ்டாயின் இறுதி மொழிகளில் சில இவை:

'லியோ டால்ஸ்டாய்க்குக் கால் பிடிக்கக் காஷா... உடம்பைப் பிடிக்க ஓஸோலின்... மடியில் கிடத்த மகள்... மடிவதைப் பார்க்க விரும்பாத செர்ட்கோவ்... என்னைத் திருத்துவதற்கு மத குரு... போட்டோ கிராபர்கள்... பத்திரிகையாளர்கள்... (கோப மாக) இந்த ஒரு டால்ஸ்டாய்க்கு இத்தனைப் பேரா? இந்த உலகில் இலட்சோப இலட்சம் மக்கள் இருக்கிறார்கள், உண்ண உணவு இல்லாமல், உடுக்க உடை இல்லாமல், இந்த ஒரு டால்ஸ்டாய்தான் உங்களுக்கு ஒசத்தியா? இவன் மட்டும்தான் உங்களுக்கு முக்கியமா?'

இந்த சொற்களைக் கேட்கும்போது மனித வாழ்க்கையின் முடியாத போரில் என்றுமே முழங்கி முடியாத முரசங்கள் உங்களுக்குக் கேட்கவில்லை? அவை கேட்காவிடில் இந்த நூலால் உங்களுக்குப் பயன் இல்லை. அவை செவிகளில் கேட்பதோடு உங்கள் இதயத்துடிப் புடன் ஒன்றி உங்கள் நிம்மதியைப் பாதித்து விட்டால், திரு. சமுத்திரத்தின் 'லியோ டால்ஸ்டாய்' நாடகத்தில் உயிர் உள்ளது, ஓட்டம் உள்ளது, நளினம் உள்ளது, நகைச்சுவை உள்ளது என்றெல்லாம் வேறு நலங் களைப் பட்டியல் போட்டு நான் கட்டியம் கூறத் தேவை இல்லை!

நண்பர் சமுத்திரத்தின் இந்த நல்ல படைப்பை நான் நன்றியுடன் பாராட்டு கிறேன். அவர் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றி வரும் பணி ஆலென வேரூன்றி, கடல் எனப் பரந்து, வானென அவர் புகழ் ஓங்கி உயரவும், அவருக்கு நலங்கள் எல்லாம் நிறையவும், எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

அன்பன்

**வி. இராமமூர்த்தி**

*'பாகீரதி',*
*மனை 285, கதவிலக்கம் 82,*
*முதல் அவென்யூ, இந்திரா நகர்,*
*சென்னை — 600 020.*

# ஒரு கேள்வியும் - ஒரு பதிலும்

எழுத்தாளன் ஒருவன், எடுத்துக் கொண்ட பொருளுக்கு உண்மையாகவும், தனக்குத்தானே விசுவாசமாகவும், படிக்கிறவர்களும், பார்க்கிறவர்களும் பயனடைய வேண்டும் என்ற மனிதாபிமானத்துடனும் எழுதினால், அவன் படைப்பு ஒரு சத்திய மாகிவிடும் என்ற எனது ஆழ்ந்த நம்பிக்கையை, இந்த நாடகத்தின்மூலம் மீண்டும் தரிசித்திருக்கிறேன்.

மனித வரலாற்றில், இதுவரை எந்த படைப்பாளியும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவிற்கு சுய சோதனை செய்து, அவர்கள் எட்டமுடியாத அளவிற்கு புகழெய்தியவரும், நோபல் பரிசுகள் பெற்ற இலக்கியவாதிகள்கூட பொறாமைப்பட முடியாத அளவிற்கு, வெகு உயரத்தில் நிற்பவரும், இன்றும் ஸோவியத் அரசின் பராமரிப்பில் உள்ள தன் நினைவில்லத்திற்கு, நாள்தோறும் குறைந்தபட்சம் ஆயிரம் பேரை வரவழைப்பவரும், தன் நாட்டில் மட்டும் 98 மொழிகளில் தனது படைப்புக்கள்

வெளியாகும் அளவிற்கு, இறந்தும், வாழ் வாங்கு வாழ்பவருமான லியோ டால்ஸ் டாயை, நாடக ரூபத்தில் காட்ட முடியும் என்று நான் நினைத்துக்கூடப் பார்க்காத சமயத்தில்...

இந்த ரஷ்ய ஞானியின் 150ஆவது பிறந்த ஆண்டை, செம்மைப்படுத்துவதற்காக, இந்தோ—சோவியத் நட்புறவுச் சங்கத்தின் சார்பில் ஓர் அமைப்புக் கூட்டம் நடந்தது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில், டால்ஸ்டாய் 150ஆவது ஆண்டு விழாக் கமிட்டி அமைக்கப்பட்டது. கமிட் டிக்கு, கவிஞர்கள் கே. ஸி. எஸ். அருணா சலம், புத்தனேரி சுப்பிரமணியம் ஆகியோ ரும், நானும் செயலாளர்களாக நியமிக்கப் பட்டோம். இந்தச் சமயத்தில், சங்கத்தைச் சேர்ந்த திரு. நவாப்ஜான் என்ற இளைஞர், டால்ஸ்டாயின் படைப்புக்களில் ஒன்றை நாடகமாக்கித் தரவேண்டும் என்று கேட்ட போது, நான் டால்ஸ்டாயின் இறுதிகால வாழ்க்கையை நர்டகமாகக் காட்டினால் சிறப்பாக இருக்கும் என்று வாய்தவறிச் சொல்ல, அந்த இளைஞர் அதையும் நானே முடிக்க வேண்டும் என்றார். 'புலிப்பால் கொண்டு வா' என்பது போல், தட்டிக் கழித்துவிடலாம் என்ற தைரியத்தில், அவரை சம்பந்தப்பட்ட புத்தகங்களைக் கொண்டு

வரும்படிச் சொல்ல, அவரோ, பல குவளை களில் பாலைக் கொண்டு வந்தார். நானோ குடிக்கு முன்னாலேயே விக்கினேன்.

எனினும், அந்த இளைஞரையாவது திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஆசையில், நான் பத்தாண்டுகளுக்கு முன்னர் படித்த டால்ஸ்டாயின் வரலாற்றுப் புத்தகத்தை (இரண்டு தொகுதிகள்) மீண்டும் படித்த துடன், சோவியத் அரசாங்கம், டால்ஸ் டாயின் நூற்றாண்டு விழாவின் போது வெளியிட்ட நினைவு மலரையும், இதரக் கட்டுரைகளையும் படித்தேன். டால்ஸ்டாய் காலத்தில் வாழ்ந்து, அவருடன் நெருங்கிப் பழகிய ரோமன் ரோலண்ட், மார்க்ஸும் கார்க்கி, செர்ட்கோவ், செக்கோவ், அலெக்ஸாண்டர் கோல்டன் விஸ்ஸர், டர்க்னோப், டால்ஸ்டாயின் மூத்த மகன் செர்ஜி, மகள் டான்யா, மனைவி சோன்யா, அவருடன் 'ஓடிப்போன' டாக்டர் காஷா— ஆகியோரின் நினைவுக் கட்டுரைகளையும், புரட்சி படைத்த லெனினின் கட்டுரையை யும் படிக்கப் படிக்க, என்னுள் 'நான்' விலகி, டால்ஸ்டாயின் ஏதோ ஒரு கூறு என்னுள் விஸ்வரூபமெடுத்ததை நானே புரிந்து கொண்டேன். நாடகத்தை எழுதாமல் இருக்க முடியாது என்ற உந்தல் நிலை ஏற்பட்டது. மேலே குறிப்பிட்ட பெரு

மக்களின் தார்மிகத் துணையுடன், எழுத்துப் பிரசவம் இரண்டு நாளில் முடிந்துவிட்டது. சுகப் பிரசவந்தான். ஆனால் இந்தப் பிரசவத் திற்கான காரியம், பத்தாண்டுகளுக்கு முன்பு டால்ஸ்டாயின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போதே ஏற்பட்டிருக்க வேண்டும்.

என்றாலும், நான் எழுதியிருப்பதன் இயல்பு பற்றி எனக்கே புரியாத 'அனுமான்' நிலையில் இருந்தபோது, இதைப் படித்துப் பார்த்த என் நண்பரும், ஜனசக்தி உதவி ஆசிரியருமான திரு. சோமு, அனுபவம் வாய்ந்த கலைஞர்களால்தான், மனம் நெகிழச் செய்யும் இந்த உரையாடலுக்கு உயிர் கொடுக்க முடியும் என்றும், நாடகம் மிகச் சிறப்பாக வரும் என்றும் தொலை நோக்கோடு சொன்னார். இந்தச் சந்தர்ப்பத் தில், திரு. நவாப் ஜானால் நாடகத்தை எடுத்து நடத்த இயலாத நிலை ஏற்பட்ட போது, நான் கலைமாமணி பி. ஏ. கிருஷ்ணனிடம், படித்துக் காண்பித்தேன். நான் படிக்கப் படிக்க, அவர் அங்கேயே ஒரு டால்ஸ்டாயாக மாறிவிட்டார். நாடகத்தை இவரிடம் எப்படியாது 'தள்ளி'விட வேண்டும் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தபோது, அவரோ, 'எனக்குத் தான் வேணும், எனக்குத்தான் வேணும்'... என்று அடம் பிடித்தார்.

உடனே நான், டால்ஸ்டாய் கமிட்டியின் முன்னால் எழுதியதைச் சமர்ப்பித்தேன். கமிட்டியும் (படித்துப் பார்த்துவிட்டு) நாடகத்தை அரங்கேற்ற மகிழ்ச்சியுடன் சம்மதித்தது. கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம், உரையாடல்களை 'எடிட்' செய்ததுடன், நாடக ஒத்திகைகளையும், சொந்தச் சிரமங்களைப் பார்க்காமல், பார்த்தார். அவருடைய அன்பான மேற்பார்வையில், கலைமாமணி பி. ஏ. கிருஷ்ணன் அவர்களின் டைரக்ஷனில், அவரும், கலைமாமணி தாம்பரம் லலிதாவும், இதரக் கலைஞர்களும் பங்கேற்ற இந்த நாடகம், டால்ஸ்டாய் ஆண்டுவிழாக் கமிட்டி, இந்தோ— சோவியத் நட்புறவுச் சங்கம், சோவியத் தூதரக கலாச்சாரப் பிரிவு— ஆகிய முத்தரப்பின் சார்பில், 9-11-1978-ல், 'கல்கி' ஆசிரியர் திரு. கி. ராஜேந்திரன் தலைமையில், சோவியத் கலாச்சார மாளிகையில் அரங்கேற்றமாகியது. நாடகத்தைப் பார்த்த அத்தனை பேரும் அறிவு வசப்பட்டவர்கள். அதாவது உணர்ச்சி வசப்படாதவர்கள். அன்று அவர்களும், நாடகத்தைப் பார்த்து, தாங்கள் மெய்மறந்து போனதாய்ச் சொன்னதுடன், என் முதுகைத் தட்டிக் கொடுத்தபோது, என்னைப் போன்ற ஒரு சாதாரணவாதிக்கும், அசாதாரண பெயரைக்

கொடுத்த டால்ஸ்டாயை மானசீகமாக வணங்கிக் கொண்டேன்.

'மெயில்', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'இந்து' முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளும், மக்கள் செய்தி, ஜனசக்தி, அண்ணா, தென்னகம், தினகரன், தினத்தந்தி, மாலை முரசு, ஆனந்த விகடன், தாமரை முதலிய தமிழ்ப் பத்திரிகை களும், நாடகத்தை ஒருமனதாகப் பாராட்டின. மக்கள் செய்தியில், இரண்டு தடவை விமர்சனங்கள் வந்தன. ஆனந்த விகடன் கலைஞர் பி. ஏ. கிருஷ்ணனை, 'டால்ஸ்டாய்' கிருஷ்ணன் என்று தகுதி யுணர்ந்து பாராட்டியது. இதையடுத்து, ஒரு சபாவில் நடந்த இந்த நாடகத்தை 'சபாத் தனமாக' இருக்கும் என்று வந்து, ஏமாற்ற மடைந்த ஒரு சிலர், ஊளையிட்ட போது, 'இந்துப்' பத்திரிகை சுட்டிக் காட்டியது போல், பொதுமக்களே, 'ஊளையர்களை' வெளியேற்றியது, டால்ஸ்டாயின் பலம். அந்த பலத்தை ஆதாரமாகக் கொண்ட இந்த நாடகத்திற்கு வெற்றி... நல்ல வெற்றி. இந்த நாடகத்தை திருவாளர்கள் ஆர். நல்ல கண்ணு, பி. கே. ராமசாமி, தா. பாண்டியன், சி. ஏ. பாலன், க. மாணிக்கம் முதலிய தலை வர்களும், சிறந்த இலக்கியவாதிகளான திரு. வி. இராமமூர்த்தி, ஐ.ஏ.எஸ்., திரு. திவான் முகம்மது,ஐ.ஏ.எஸ்., திருபரணீதரன், 'மாஜினி'

—ஆகியோரும் பார்த்துப் பாராட்டிக் கௌர வித்தார்கள்.

இந்த நாடகம், மீண்டும் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் சார்பில் பொங்கலை முன்னிட்டு, அங்கே நடந்த மூன்று நாளைய இலக்கிய கருத்தரங்கின் முதல் நாளில் நடந்தது. கல்லூரிப் பேராசிரியர்கள், பேராசிரியைகள், இலக்கியவாதிகள் பார்த்த இந்த நாடகத்திற்குப் பரவலாக ஒரு நல்ல பெயர் கிடைத்தது. இதேபோல் சென்னை வானொலியில் ஒலிபரப்பான இந்த நாடகத்திற்கு இருந்த வரவேற்புக் கடிதங் களைக் கணக்கில் கொண்டு, சென்னை வானொலி நிலையம் ஏற்பாடு செய்திருந்த ஒரு கலந்துரையாடலும் ஒலிபரப்பாகியது. இதில் பிரபல எழுத்தாளர் அகிலனும் கலந்து கொண்டார்.

மொத்தத்தில், என் எதிர்பார்ப்புக்குப் பன்மடங்கு மேலாக இந்த நாடகம் வெற்றி பெற்றது. கிறிஸ்தவ இலக்கிய சங்கப் பொதுச் செயலாளர் பொறுப்பு வகிக்கும் பேரா சிரியர் திரு. பாக்கியமுத்து 'இந்த நாடகம். தமிழிற்கு புதுமை' என்றார். இந்தப் புதுமை பழமையாகும் அளவிற்கு, எழுத்தாளத் தோழர்கள் சிறந்த நாடகங்களை உருவாக்க வேண்டும் என்பதே என் ஆசை. உருவாக்கி வருகிறார்கள் என்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தி.

## ஒரு முக்கியமான செய்தி

இந்த நாடகக் காட்சிகள், வரலாற்று அடிப்படையில், ஆதாரங்களுடன் எழுதப் பட்டவை. கார்க்கி, டால்ஸ்டாயைப் பார்த்து, 'கடவுள்மாதிரி' என்பது அவரது கட்டுரையில் உள்ளது. டால்ஸ்டாயின் உரையாடல்கள், அவர் எழுதிய கட்டுரை களிலிருந்தும், கடிதங்களிலிருந்தும், 'டயரியி' லிருந்து எடுக்கப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டு, நம் மண்ணின் மணத்துடன் உரைநடை யாக்கப்பட்டது. மொத்தத்தில், சொல்லப் பட்டவை, அவரது கருத்துக்கள். அவற்றைச் சொன்ன விதந்தான் என்னது. சிறந்த புகைப்பட நிபுணராகவும் டால்ஸ்டாய் என்ற சுடர்விளக்குக்குத் தூண்டுகோலாயும் இருந்தவர் செர்ட்கோவ் (Chertkov). நாடகம், பார்த்த ஒரு சிலர், இவரை நாவலாசிரியர் செகோவ் என்று தவறாக நினைத்தார்கள். இதேபோல், டால்ஸ்டாயின் மனைவி சோன்யாவை என் படைப்பு, கொடுமைக் காரியாகச் சித்திரித்தால், அது என் தவறு. காட்சிகளில் வருவதுபோல் சம்பவம் நடந்தது உண்மைதான் என்றாலும், சமூகப் பிரக்ஞைக்கு முதலிடம் கொடுத்த ஒரு மேதைக்கும், அன்றைய உத்ரவாதம் இல்லாத ஒரு சமூகத்தில் குடும்பப் பிரக்ஞைக்கு முதலிடம் கொடுத்த அவரது மனைவிக்கும் மோதல் வருவது தவிர்க்க இயலாதது.

டால்ஸ்டாய் இறந்ததும், அந்த அம்மாவே, நிலத்தைக் குடியானவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். டால்ஸ்டாய் மியூஸியம் அமைப்பதற்கு, ஜார் அரசாங்கத்திடம் மன்றாடியவர் இந்தத் தாய்.

## ஒரு கேள்வி:

மேதைகளின் சொந்த வாழ்க்கையைக் கிளற வேண்டியது அவசியமா என்ற ஒரு கேள்வி எழுவது இயற்கையே. எனினும், குப்பைத்தனமாக வாழ்ந்தவர்களின் வாழ்க்கைக் கூறுகளைக் கிளறினால், குப்பைதான் மிஞ்சும். அதே சமயம், கடலை விட ஆழமாகி, வானைவிட உயர்ந்து நிற்கும் டால்ஸ்டாயின் வாழ்க்கைப் பகுதிகளைக் கிளறும்போது, ஓர் எழுத்தாளன் எப்படி வாழ வேண்டும், எழுத்து எப்போது சாத்ய மாகும், அது எப்போது சத்தியமாகும் என்பன போன்ற கருத்து முத்துக்கள் கிடைக்கும். இந்த ஞானியின் வாழ்க்கை அவரது படைப்புக்களுக்கு இணையான ஒரு காவியம். இந்தக் காவியத்தின் கடைசிக் கூறை— சொல்லப்போனால் உச்சகட்டத்தை நாடக நூலாக வெளியிடும் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்திற்கும், மேடை நாடக உரையாடலை, நூலுக்கேற்ப மேம்படுத்திய பேராசிரியர் திரு. பாக்கியமுத்துவுக்கும், சிறந்த ஆய்வுரை தந்த மிகச்சிறந்த இலக்கிய

வாதியான நண்பர் வி. இராமமூர்த்தி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், நாடகத்திற்கு உயிரூட்டிய 'கலைமாமணி' பி.ஏ. கிருஷ்ண னுக்கும், இதர கலைஞர்களுக்கும், நாட கத்தைப் பார்த்து கௌரவித்த தலைவர் களுக்கும், இந்நாடகம் தமிழகம் முழுதும் நற்பெயர் வாங்கிடக் காரணமான கவிஞர் கே.வி.எஸ். அருணாசலம், நண்பர் சோமு, டால்ஸ்டாய் 150ஆவது ஆண்டு விழாக் கமிட்டி, சோவியத் தூதரக கலாச்சாரப் பிரிவு ஆகிய அத்தனை நண்பர்களுக்கும் அமைப்புக்களுக்கும் என் நன்றி.

## ஒரு பதில்:

வாசகர்களாகிய உங்களுக்கு ஒரு வேண்டுகோள்—

'எந்த உணர்வோடு, ஒரு படைப்பைப் படைக்கிறோமோ, அந்த உணர்வு, படிப்பவர் மனத்தில் தோன்றினால், அது இலக்கியம். நல்லுணர்வுடன் எழுதினால், அது நல்லி லக்கியம். நச்சுணர்வு தோன்றினால், அது நச்சிலக்கியம்' என்று கூறியவர் லியோ டால்ஸ்டாய்.

இந்த நூல், எழுத்தாளர்கள் எப்படி வாழ வேண்டும் என்ற தோழமை உணர்வுடனும், அரிய மேதையின் மன உளைச்சல்களை அனுதாபத்துடனும், அதிலிருந்து அவர்

மீண்டதைப் பெருமிதத்துடனும், புகழை விரும்பாத ஒருவருக்கு புகழ் தானாக வரும் என்ற கருத்துடனும், எழுதியதாக, நான் நினைக்கிறேன். இத்தகைய தோழமைப் பாசம், கழிவிரக்கம், பெருமிதம், கருத் தாய்வு— ஆகிய உணர்வுகள் நாடகத்தைப் படித்து முடித்ததும், உங்களுக்கு வருகிறதா? தயவுசெய்தோ அல்லது செய்யாமலோ, கடிதம் எழுதுங்கள்; எழுதுவீர்களா?

நீங்கள் எழுதினால், நாங்கள் இலக்கியக் `கணிப்பு செய்யலாம்.

அன்பன்,
**சு. சமுத்திரம்**

# லியோ டால்ஸ்டாய்

## பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | லியோ டால்ஸ்டாய் | – 89 வயது |
| 2. | சோன்யா | – 68 வயது, டால்ஸ்டாயின் மனைவி |
| 3. | அலெக்ஸான்ட்ரியா | – டால்ஸ்டாயின் மகள்– 20 வயது |
| 4. | லியோ | – டால்ஸ்டாயின் மகன்– 24 வயது |
| 5. | செர்ட்கோவ் | – டால்ஸ்டாயின் ஆத்ம நண்பர்– 58 வயது |
| 6. | கார்க்கி | – எழுத்தாளர் |
| 7. | காஷா | – டால்ஸ்டாயின் குடும்ப டாக்டர் |
| 8. | ஓஸோலின் | – ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் |
| 9. | மாணவன் | |
| 10. | பண்ணையாள் | |

# காட்சி 1

**இடம் :** *யாஸ்நயா பொல்யானா* (Yasnaya Polyana) *பண்ணை.*
*வீட்டின் படிப்பறை — காலை வேளை.*

**பாத்திரங்கள் :** *டால்ஸ்டாய், செர்ட்கோவ், மாணவன், சோன்யா.*

*(டால்ஸ்டாய் செருப்பு தைத்துக் கொண்டிருக்கிறார். அவரது ஆன்மிக மாணவர் செர்ட்கோவ் வருகிறார்.)*

**செர்ட் :** (அதிர்ச்சியுடன் உற்றுநோக்கி) அய்யா... இந்த தள்ளாத வயதில் முதுகை வளைத்து இப்படி செருப்பு தைத்தால் உடம்பு என்ன ஆவது? எங்களுக்காக... இருட்டு வீட்டில் இல்லாத குருட்டுப் பூனையாகத் தவிக்கும் பாமர மக்களுக்காகத்தான் நீங்கள் வாழ்கிறீர்கள்... உங்களுக்காக வாழவில்லை. இந்த உடம்பும் உயிரும் உங்களுக்குச் சொந்தமல்ல... எங்களுக்கே சொந்தம்...

**டால்ஸ் :** நீ எந்த பாமர மக்களைச் சொல்கிறாயோ அந்தப் பாமர மக்களில் ஒருவனான என் பண்ணையாளுக்காக தைக்கிற செருப்பு இது. அவர்கள் பிரபுவாக வாழும் இந்த ஏலாதவனுக்கும்

இதுமாதிரி எத்தனையோ மற்றவர்களுக்கும் செய்துவரும் உதவிக்கும், சிந்தும் வேர்வைக்கும் என் தோலைக்கூட செருப்பாகத் தச்சுப் போடலாம்... அது என்னால முடியாது, இப்படியாவது தைக்கலாம்னு.

**செர்ட்** : உடம்பு என்னாவறது?

**டால்ஸ்** : ஒன்றும் ஆகாது. கைதிகளிடம் வேலை வாங்குவது ஏன் தெரியுமா செர்ட்கோவ்? உடலுழைப்பு மூலம் ஒருவன் மனமும் சுத்தப்படும் என்கிற தத்துவம்தான் காரணம். இந்த கிரிமினல் ஜார் அரசுக்கு, நல்லவர்கள் கிரிமினல்களாக... கிரிமினல்கள் யோக்கியர்களாகத் தெரியுது. இந்த நிலை நீடிச்சா புரட்சி வராமல் போகாது.

**செர்ட்** : அது வரட்டும் போகட்டும்... ஏதாவது எழுதினீர்களா?

**டால்ஸ்** : (செருப்பு தைக்கும் ஊசியைக் காட்டியபடி) இந்த ஊசியை விட பேனா முக்கியமா? என் அருமை பண்ணையாளுக்குப் படைக்கிற செருப்பைவிட எந்தப் படைப்புச் சிறந்தது?

**செர்ட்** : உங்களுக்கு மனசு சரியில்லேன்னு நினைக்கிறேன். உள்ளத்தையும் உடம்பையும் வருத்துவது சரியில்லை.

**டால்ஸ்** : நிறுத்து உன் பல்லவியை. இந்தச் செருப்புத் தைக்கிறதுல இருக்கிற இன்பத்துக்கு இணையா எந்த இன்பத்தையும் நான் அனுபவிக்கவில்லை. 'போரும் சமாதானமும்' எழுதும்போது ஏற்பட்ட இன்பத்தை

விட இது அதிகம். ‘அன்ன கரீனா’ எழுதும்போது ஏற்பட்டது ஆனந்தம்... ஆனா இந்தச் செருப்பைத் தைக்கும்போது பரமானந்தம். ‘புனர்ஜென்மம்’ எழுதும்போது நான் ஒரு போலி ஜென்மம் என்று நினைத்தேன். செருப்பைத் தைக்கத் தைக்க... நான் நிஜமாவே புனர்ஜென்மம் எடுக்கப் பார்க்கிறேன் செர்ட்கோவ்.

**செர்ட்** : கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்துக்குங்க... தயவு செய்து...

**டால்ஸ்** : நீதான் விடாக்கண்டனாச்சே. ஆமாம்... கையில் என்ன... இதெல்லாம்...

**செர்ட்** : நான் வந்ததே இவற்றை உங்களிடம் படிக்கத் தான். இது லண்டன் டைம்ஸ் எழுதியிருக்கிற பாராட்டு (படிக்கிறார்.) ‘டால்ஸ்டாய் உண்மை யிலேயே ஒரு தேவதை. அவரது ‘உனக்குள்ளேயே சொர்க்கம் உள்ளது’ என்ற நாவல் மனிதகுல வழிகாட்டி.’ இது பிரெஞ்ச் பத்திரிகை. ‘ஜார் மன்னர்... டால்ஸ்டாயுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டும்-- இல்லையானால், ஜாரைக் காப்பாற்ற யாராலும் முடியாது’ என்று எழுதியிருக்கு. இது இத்தாலிப் பத்திரிகை. உங்களின் ‘கலை என்றால் என்ன?’ என்கிற கட்டுரையை விமர்சித்திருக்கு. படிக்கிறேன் பாருங்க-- ‘கலை என்றால் அது அடிமன வருடல், இதய பிரக்ஞை, உள்ளார்ந்த வெளிப்பாடு, பாதிப்பு கொடுக்கும் பாதிப்பு. டால்ஸ்டாய் மிக அருமையாக...’

**டால்ஸ் :** (செருப்பைக் காட்டி) செர்ட்கோவ் இந்தச் செருப்பு நல்லா இருக்கா?

**செர்ட் :** (திடுக்கிட்டு) என்ன... நான் கலை என்றால் என்னான்னு படிச்சா நீங்க செருப்புன்னா எதுன்னு காட்டறீங்க... இது அருமையான கட்டுரை, உங்கள் கட்டுரையை விமர்சிக்கும் கலையம்சம் கொண்ட விமர்சனம்.

**டால்ஸ் :** செர்ட்கோவ்! விமர்சகன் யார் தெரியுமா?

**செர்ட் :** விமர்சகனை உங்களால்தான் விமர்சிக்க முடியும்.

**டால்ஸ் :** விமர்சகன் என்பவன் அறிஞர்களைக் கேள்வி கேட்கும் ஒரு தனி மனம் படைத்தவன். பிரக்ஞை... பாதிப்பு... அடிமன வருடல்... என்ற புரியாத வார்த்தைகளைப் புரியாமல் எழுதிக்கொண்டு, தனக்கும் புரியாமல் படைப்பாளிக்கும் புரியாமல் எழுதும் ஒரு புலம்பன். இவர்களில் சிலர் ஒப்பாரி வைக்க இலக்கியம் ஒரு இழவு வீடு. அவ்வளவுதான்.

**செர்ட் :** என்ன நீங்க! இது நம் ரஷிய பத்திரிகை, உங்களை ஓகோன்னு பாராட்டியிருக்கு... படிக்கிறேன் கேளுங்க.

**டால்ஸ் :** (சலிப்போடு) இவற்றை எல்லாம் கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சு, டால்ஸ்டாய் ஒரு சாதாரண மனிதன் என்பதை ஏனோ புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்! என் ஆணவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று கொண்டிருக்கும்போது

இவங்க வேற அவுங்க இலக்கிய ஆணவத்தைக் காட்ட எனக்கு இரை போடறாங்க. விட்டுத்தள்ளு-- வேறு ஏதாவது பேசுவோம்.

**செர்ட்** : உங்களுக்கு ஏன் இப்படிக் கோபம் வருது? (கல்லூரி மாணவன் வரும் காலோசை கேட்கிறது. வருகிறான்) என்ன வேணும்?

**மாண** : நான் டால்ஸ்டாயைப் பார்க்கணும், அவரு எங்கே இருக்காரு, இப்போ பார்க்க முடியுமா?

**செர்ட்** : டால்ஸ்டாயை நீ பார்த்ததே இல்லையா?

**மாண** : (செர்ட்கோவை உற்றுப் பார்த்து) நீங்கதான் டால்ஸ்டாயா?... நீங்கதான் டால்ஸ்டாயா... குருஜீ... நீங்க... மகத்தான... சிறந்த... அருமையான... ஆழமான...

**செர்ட்** : இந்தாப்பா... என் முகத்தை நல்லாப் பாரு. டால்ஸ்டாய்க்கு இருக்கிற களை ஏதாவது இருக்கிறதா?

**மாண**: இல்லை... உங்க முகம் சைத்தான் முகம் மாதிரி தெரியுது.

**செர்ட்** : என்ன...

**மாண** : எதுக்கு... வழவழாப் பேச்சு... இப்போ நான் டால்ஸ்டாயைப் பார்க்கணும். அதுக்கு வழி சொல்லுங்க.

**செர்ட்** : சைத்தான் வழிகாட்டறது தப்புப்பா.

**மாண :** உங்ககிட்டே என்ன பேச்சு... (செருப்பு தைத்துக் கொண்டிருந்த டால்ஸ்டாயிடம் நெருங்கி) இந்தாப்பா செருப்பு தைக்கிறவரே (கோட்டுப் பையில் இருந்து எடுத்து) இந்தா ஒரு ரூபிள் (Ruble). உனக்குதான் வச்சுக்கோ. நான் இப்போ டால்ஸ்டாயைப் பார்க்கணும்.

**டால்ஸ் :** அதுக்கு இது லஞ்சமா?

**மாண :** இல்லை... அன்பளிப்பு.

**டால்ஸ் :** லஞ்சம் கொடுக்கிற பழக்கம் உனக்கு எப்படி வந்தது?

**மாண :** ஜார் மன்னர் அரண்மனையைச் சுற்றிப் பார்க் கிறதுக்கு பல பேர் பல பொருளை வாங்கறாங்க... அதனாலதான்...

**டால்ஸ் :** போகட்டும். இதோ இவர்கிட்ட கொடுக்காமே என்கிட்ட ஏன் கொடுக்கிறே?

**மாண :** இவரு போட்டிருக்கிற உடைகளைப் பார்த்தா ஆசாமி நிறைய கேட்கிறவர் மாதிரி தெரியுது. இவருக்கு லஞ்சம் கொடுக்கிற அளவுக்கு நான் பணக்காரன் இல்லை. இந்தா... ரூபிளை எப்படி சந்தோஷமா வாங்கினியோ அப்படி சந்தோஷமா டால்ஸ்டாயையும் கூட்டிக்கிட்டு வா.

**டால்ஸ் :** அந்தக் குட்டிச்சாத்தானை நீ அவசியம் பார்க் கணுமோ?

**மாண :** உனக்கு இன்னொரு ரூபிள் வேணுமா? நேரடி யாவே கேக்கறது.

**செர்ட்** : அவருதான் டால்ஸ்டாய்.

**மாண** : நீங்களும் நேரடியாகவே கேளுங்களேன். மூணு ரூபிள் தர்றேன். ஏன் கிண்டல் பண்றீங்க. டால்ஸ் டாயை காட்டப் போறீங்களா இல்லே...

**டால்ஸ்** : நான்தாம்பா டால்ஸ்டாய்...

**மாண** : நீங்கதான் டால்ஸ்டாயா! (மண்டியிட்டு) டால்ஸ் டாய் என்னை மன்னிச்சிடுங்க. நீ...ன்னு பேசிட்டேன், என்னை மன்னிச்சிடுங்க. மடத்தனம் பண்ணிட்டேன்... என்னை மன்னிச்சிடுங்க.

**டால்ஸ்** : செர்ட்கோவ்... இவனுக்கு டால்ஸ்டாயை நீன்னு பேசினதுலேதான் வருத்தம்; செருப்பு தைக்கிற தொழிலாளியை அப்படிப் பேசிட்டோமேன்னு வருத்தப்படலெ... கஷ்டமான தொழிலைக் கேவலமா நினைச்சு கடைசியிலே அந்தத் தொழில் செய்றவங் களையும் கேவலமா நினைக்கிறோம்.

**மாண** : (மண்டியிட்டபடி) டால்ஸ்டாய்... குருவே... என் பிதாவே என்னை மன்னிச்சிடுங்க, மன்னிச்சிடுங்க, மன்னிச்சிடுங்க. அறியாமையால் செய்த குற்றத்தை அடியோடு மறந்துடுங்க.

**டால்ஸ்** : நீ முதல்ல மண்டி போடறத விட்டுட்டு மனித னாய் நில்லு.

**மாண** : நான், நீன்னு பேசிட்டேன்... உங்களை இழிவு படுத்தின என்னை மன்னிச்சிடுங்க... பிரபு மன்னிச் சிடுங்க.

**டால்ஸ்** : நீ எழப்பா மொதல்லே.

**மாண** : ஜார் மன்னரையே தூசியாய் நினைக்கும் என் டால்ஸ்டாயை இழிவா பேசிட்டேன். என்னை மன்னிக்க மாட்டீங்களா?

**டால்ஸ்** : நீ எழுந்திருப்பா, மண்டி போடறத விட மாட்டியா?

**மாண** : நீங்க தெய்வம், யேசுவின் மறு அவதாரம்! புத்தரின் வாரிசு... உங்கள் முன்னாலே மண்டி போட்டு பிராயச்சித்தம் தேடறதுலே தப்பில்லெ... பிரபுவே... குருவே... சிந்தனைச் செம்மலே... நீங்கள் தெய்வம்.

**டால்ஸ்** : (மண்டியிட்டு) நான் தெய்வமில்லே... மனிதன்... சாதாரண மனிதன். நான் உன்போல பல இளைஞர் களுக்கு தெய்வம்னு ஒரு நினைப்பை ஏற்படுத்தி பாவம் பண்ணிட்டேன். நீயும் என்னை மன்னிச்சிடு... மன்னிச்சேன்னு ஒரு வார்த்தை சொல்லு... ஒரே ஒரு வார்த்தை.

**மாண** : நீங்கள் மண்டியிடலாமா... இந்த அற்பனிடம் மன்னிப்பு கேட்கலாமா... எழுந்திருங்க பிரபு...

**டால்ஸ்** : நீ மண்டி போட்டிருக்கிறவரைக்கும் இந்த அற்ப மனிதன் மண்டியிடறதுல தப்பில்லெ தம்பி... தப்பில்லெ.

**செர்ட்** : இந்தாப்பா, உன்னை மாதிரி அவரும் மண்டியிட முடியுமா?... உடம்பு தாங்குமா?... நீ வேலைக்குப்

போன பிறகு நிறைய பேருக்கு நிறையத் தடவை மண்டி போட வேண்டியது வரும். இப்ப எழுந்திரு... நீ எழுந்திருந்தாதான் அவர் எழுந்திருப்பார்.

*(மாணவன் எழுந்திருத்தல்—செர்ட்கோவ் டால்ஸ்டாயை தூக்கி நிறுத்துகிறார்)*

**டால்ஸ்** : நீ எங்கிருந்து வர்றே?

**மாண** : டாம்போவ் குபேறினா (Tambov Guberina)வில் இருந்து வர்றேங்க.

**டால்ஸ்** : படிக்கிறியா?

**மாண** : என்னைப் பார்த்தால் அப்படித் தெரியலையா?

**செர்ட்** : தெரியுது. நீ மண்டி போட்டதிலிருந்தே படிச்சவன்னு நல்லா தெரியுது.

**டால்ஸ்** : ஆமாம். என்னுடைய இளமை நாவலைப் படிச்சிருக்கிறியா? குழந்தைப் பருவத்தைப் படிச்சிருக்கிறியா?

**மாண** : (சமாளித்து) படி... படி... படிச்சேன்... ம்... இளமையான குழந்தை... குழந்தையான இளமை... படி... படிச்சேன்...

**டால்ஸ்** : போகட்டும். 'போரும் சமாதானமும்' படிச்சியா?

**மாண** : படிச்... சே... சமாதானமான போரு... போரான சமாதானம்... படிச்சேன்... ம்... படிப்பேன்.

**டால்ஸ்** : அப்படியா... போரும் சமாதானத்துலே எந்த பாத்திரம் உனக்குப் பிடிச்சுது.

**மாண :** பாத்திரமா!... அதுவந்து... பாத்திரம்... அற்புத மான பாத்திரம்.

**செர்ட் :** தம்பி அறிவாளி மாதிரி பினாத்தாதே... படிக்க லேன்னா படிக்கலேன்னு பட்னு சொல்லிடேன்... சும்மா சொல்லு.

**மாண :** உண்மை... படிக்கலே படிக்கலே படிக்கவே இல்லை.

**செர்ட் :** பாத்தீங்களா... படிக்கலேங்கிறதுதான் இவன் கண்டுபிடிச்ச பேருண்மை; புத்தகத்தை தேடலேங் கிறதுதான் இவன் தேடிப் பெற்ற உண்மை.

**டால்ஸ் :** மிரட்டாதே செர்ட்கோவ். தவாரிஷ்-நீ என் நாவல் களையோ, சிறுகதைகளையோ, கட்டுரைகளையோ படிக்கலேன்னு நல்லாத் தெரியுது. இதுக்காக நான் கோபப்படலே. நீ சின்னப் பையன். போகப் போக படிக்கலாம். ஆனா பல பெரிய நபர்கள், என் படைப்புகளைப் படிக்காமல் சரடு விடறாங்க... தப்பா படிச்சிட்டு பின்பற்றறவனைவிட படிக்காதவன் மேல். போகட்டும், என் கதைகளைப் படிக்கலே, ஆனா என்னைப் பார்க்க வந்திருக்கிறே... காரணம் என்னப்பா?

**மாண :** ஊருக்குப் போனதும் டால்ஸ்டாயைப் பார்த்தி யான்னு கேப்பாங்க... பார்த்தேன்னு சொல்ல வேண்டாமா...

**டால்ஸ் :** ஓஹோ... நான் உயிரோடயே மியூசியம் ஆயிட் டேனா? இதோ பாரு தம்பி, ஒரு எழுத்தாளனுக்கு

திருப்தி கொடுக்கிறது அவன் படைப்புகளைப் படிச்சிட்டு சொல்லும்போதுதான்... ஒரு எழுத்தாளன் பெயர் நிலைத்து நிக்கணும்னா அவன் அந்த படைப்புகளில் தெரியணுமே தவிர அவனுள் அந்தப் படைப்புகள் தெரியக்கூடாது. பாத்திரங்கள் முன்னாலயும் படைப்பாளி பின்னாலும் இருக்கணும். எழுத்தாளன் ஒரு ஆல் விதை. அவன் படைப்புகள் ஆலமரம். விதை பெரிசானா நோயின்னு அர்த்தம்... மரம் முளைக்காது... நிழல் கிடைக்காது... புரியுதா? தயவுசெய்து இனிமேல் எந்த எழுத்தாளன் கிட்டேயும் அவன் படைப்புகளைப் படிக்காமல் பேசாதே!

**மாண** : என்னை மன்னிச்சிடுங்க.

**டால்ஸ்** : வருத்தப்படாதே தம்பி, என் நாவல்களையே கறைச்சிக் குடிச்சிட்டு என் முன்னாலேயே தப்பர்த்தம் கொடுக்கறாங்க... அவர்களைவிட நீ எவ்வளவோ மேல்.

**செர்ட்** : நீ இப்பொ போயிட்டு இன்னொரு தடவை வா. அய்யா உணர்ச்சிவசப்படறாரு.

*(திக்பிரமையுடன் மாணவன் வெளியேறுகிறான்)*

என்ன இது... பெரிய பெரிய அறிவாளிகள் உங்களைப் பற்றி எழுதின விமர்சனங்களை உதாசினப்படுத்தின நீங்களா இந்தப் பையன் படிக்கலேன்னு உணர்ச்சிவசப்படறீங்க?

**டால்ஸ்** : செர்ட்கோவ் அறிவாளிகள் எழுத்தாளனை தாங்கள் அறிவாளின்னு காட்டிக்கிறதுக்காக

விமர்சிக்கிறாங்க-- எல்லாருமில்லே... (பலர்) இவங்க அரிப்புக்கு இலக்கியமும் எழுத்தாளனும் சொறி யறதுக்கு கம்புகள். ஷேக்ஸ்பியரைப் பாராட்ற இந்த அறிஞர்கள், ஷேக்ஸ்பியர் எந்த சமூகப் பிரக்ஞையை உண்டுபண்ணினார்னு நினைத்துப் பார்க்கிறார்களா? கலை கலைக்கேன்னு சொல்றாங்களே தவிர எதை கலைக்கச் சொல்றாங்களோ தெரியலே. ஆனா வந்துபோன பையன் எவ்வளவோ மேல். அவன் பொய்யிலையும் ஒரு விசுவாசம் இருக்கு. அவனோட அசத்தியத்திலையும் ஒரு சத்தியம் இருக்கு. அதனாலதான் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.

*(சோன்யா வரும் காலோசை கேட்கிறது.)*

**சொ்ட் :** (அவசரமாக) உங்க மனைவி சோன்யா வராங்க. அய்யா அந்த மேன் ஆண்ட் மாஸ்டரை (Man and Master) எழுதி முடிச்சுட்டீங்களா? இன்டர்மீடியறி (Intermediary) பத்திரிகைக்கு அனுப்பணும்.

**சோன்யா :** (வந்ததும்) செர்ட்கோவ் வயசான ஒருத்தர் கிட்ட எவ்வளவு நேரம் பேசறதுன்னு கணக்கில் லையா? அவரு பழையபடியும் நோயில படுத்தால் நாமுமில்லா அவஸ்தைப்படணும்?

**செர்ட் :** அவருக்கு என்ன தேவை எப்போ தேவைன்னு எனக்குத் தெரியும்.

**சோன்யா :** இவரோட வாழ்ந்து பதிமூணு பிள்ளைகளை யும் மூணு அபார்ஷனையும் பார்த்த என்னைவிட

உங்களுக்கு நல்லா தெரியுமோ? இவர் என் கணவர்... என் உயிர்!

**செர்ட்** : அதை மறந்துட்டீங்க! சிப்பிக்குள்ளே முத்து இருக்கிறதுனாலே முத்து, சிப்பிக்கு சொந்தமா யிடாது.

**சோன்யா** : ஓஹோ-- அந்த அளவுக்கு வந்தாச்சா? குட்டிச் சாத்தான் புகுந்த வீடு உருப்பட்டாலும் உருப்படும். ஆனா நீங்க புகுந்த வீடு உருப்படவே உருப்படாது. என் கணவனுக்கும் எனக்கும் இடையே கலகம் உண்டாக்கிற நீங்க நல்லா இருக்கமாட்டீங்க!

**செர்ட்** : என் குருவையும் என்னையும் பிரிச்சு வைக்கிற நீங்களும்...

**டால்ஸ்** : செர்ட்கோவ்... நீ போயிட்டு அப்புறம் வாரியா...

**சோன்யா** : அப்புறம் எதுக்கு? அடுத்தவாரம் வரட்டும்.

*(செர்ட்கோவ் போகிறார் —டால்ஸ்டாய் செருப்பை எடுத்துத் தைக்கிறார்)*

**சோன்யா** : செர்ட்கோவ்கிட்ட பேசணும்-- என்னைப் பார்த்தா செருப்பை எடுக்கணுமோ? நான் செருப்பை விடக் கேவலமா போயிட்டேன்-- அப்படித்தானே...

**டால்ஸ்** : சோன்யா, அவன் எனக்காக ஜார் அரசாங்கத் தால் நாடு கடத்தப்பட்டவன்... நான் சொல்றபடி வாழ்றவன்!

**சோன்யா** : அப்புறம்?

**டால்ஸ் :** ஊன உடம்பால பெற்ற பிள்ளை பதிமூணு... ஆனால் என் ஞான உடம்புல பிறந்த ஒரே பிள்ளை செர்ட்கோவ்... இந்தக் கிறுக்கனுக்காக வாழ்கிற கிறுக்கன் அவன்.

**சோன்யா :** நான் கேட்டுக்கிட்டுதானே வந்தேன். மேன் ஆன்ட் மாஸ்டர் (Man and Master) கதையை வாங்க வந்திருக்கான் கழுத களவாணிப் பய.

**டால்ஸ் :** (சிரிப்புடன்) என் கதை கழுதை... அவன் களவாணி. இந்தக் கழுதைக்கு நீதான் குட்டிச்சுவரா நிற்கிறே...

**சோன்யா :** சிரித்து மழுப்ப வேண்டாம்... அந்தக் கதை எனக்கு வேணும். உங்க கொள்கைக்காக என் பிள்ளைங்களை நடுத்தெருவிலே நிறுத்த முடியாது.

**டால்ஸ் :** உனக்குத்தான் 1881ஆம் வருடத்துக்கு முன் னாலே எழுதின என் படைப்புகள் எல்லாத்துக்குமே காப்பிரைட் கொடுத்துட்டேனே, அதுலேயே போதிய வருமானம் வரும். அதற்குப் பிறகு உள்ளதை யார் வேணும்னாலும் வெளியிடலாம்னு உரிமை கொடுத்துட்டேன்... அதைக் கேட்டா எப்படி?

**சோன்யா :** எப்படியாவது எனக்கு வேணும். உங்க உப்புச் சப்பில்லாத இலட்சியத்துக்காக ஊரார்கள் உங்க எழுத்துச் சொத்தை அனுபவிக்க விட மாட்டேன். என் குடும்பம் உங்க இலட்சியத்துக்குப் பரிட்சைக்கூடமா இருக்கிறதை நான் அனுமதிக்க மாட்டேன். அதை தரப்போறீங்களா இல்லையா?

**டால்ஸ்** : தரலேன்னா...?

**சோன்யா** : எனக்கு தெரியுமே... என்றைக்கு என் இளமை என்னை விட்டுப் போச்சுதோ அன்றைக்கே நீங்க என்னை விட்டுப் போயிட்டீங்க. அந்த குடிகெடுப்பான் செர்ட்கோவ் என்றைக்கு வந்தானோ அன்றைக்கே என் புருஷன் எனக்கு இல்லாமெ போயிட்டாரு. நீங்க மட்டும் அந்தக் கதையைத் தரலேன்னா நான் இப்பவே ஆற்றிலே விழுந்தோ... விஷத்தைக் குடிச்சிட்டோ சாகப் போறேன்... நான் பிறந்திருக்கவே கூடாது. அப்படிப் பிறந்தும் கல்லாப் போன உங்களுக்கு மனைவியா வாய்த்திருக்கக் கூடாது. நான் பாவி, நான் சாக வேண்டியவள்... சாகப் போகிறேன்.

*(ஓட முயல டால்ஸ்டாய் பிடித்துக் கொள்கிறார்)*

**டால்ஸ்** : இதோ பாரு, உனக்கு அந்தக் கதைதானே வேணும்... (மேஜை ட்ராயரிலிருந்து புத்தகத்தை எடுத்து) இந்தா நீயே வெளியிடு... என்னையும் இந்த லௌகீக பாவத்துல தள்ளிட்டே.... இப்போ ஆளை விடு... நான் செருப்பு தைக்கணும்.

**சோன்யா** : (புத்தகத்தைப் பெற்று) என்னைவிட உங்களுக்கு செருப்பு ஒசத்தியா போயிட்டுதோ. பண்ணைக்காரப் பயல்களுக்கு செருப்பு தச்சு தச்சு உங்க புத்தியும் செருப்பா போயிடுச்சு!

**டால்ஸ்** : அப்படிச் சொல்லாதே, சோன்யா! செருப்பு தைக்கிறதுலே கேவலமில்லெ. என்ன செய்கிறோம்

என்பது முக்கியமல்ல... எதுக்காகச் செய்கிறோம் என்பதுதான் முக்கியம். இதுவரைக்கும் நான் எழுதின படைப்புகள் ஏழ்மையின் வெற்றியே தவிர ஏழைகளின் வெற்றியல்ல. அதனாலேதான் அந்த ஏழைகளுக்கு வெற்றியளிக்க இதைத் தைக்கிறேன். உனக்கும் நரம்பு தளர்ச்சி வந்துட்டுது... அடிக்கடி கோபப்படறே... நீயும் திருந்தணும்னா செருப்பு தச்சுப் பழகணும். இந்தா... கொஞ்சம் தை பார்க்கலாம்.

**சோன்யா :** இன்னமும் இருந்தா இந்த செருப்பாலேயே அடிப்பீங்க போலிருக்கே!

**டால்ஸ் :** அடிக்க மாட்டேன். உன் கைபட்டு இந்த செருப்பு பாவமாப் போனாலும்... இதில் என் அருமை பண்ணையாள் கால்பட்டு இதே செருப்பு புண்ணிய மாயிடும். இந்தப் புனிதமான செருப்பு உன் கன்னத்துலே பட்டு களங்கமாகக் கூடாது!

*(சோன்யா கோபத்தோடு போகிறாள். டால்ஸ்டாய் சிரிக்கிறார்.)*

## காட்சி - 2

**இடம்** : *யாஸ்நயா போல்யானா பண்ணை*

**நேரம்** : *நண்பகல்*

***பாத்திரங்கள்*** : *டால்ஸ்டாய்— அலெக்ஸான்ட்ரியா— சோன்யா— பண்ணையாள்.*

*(அலெக்ஸாண்ட்ரியா உள்ளிருந்து கோபமாகப் பேசிக்கொண்டு வர பின்னால் டால்ஸ்டாய் வருகிறார்.)*

**அலெக்ஸ்** : கொடுத்த வாக்கைக் காப்பாத்தாதீங்க. பெண்டாட்டிக்காகக் கொள்கையை காத்திலே விடறவங்களைக் கண்டா எனக்குக் கோபம் வந்துடுது. அது பெற்ற தந்தையா இருந்தாலும் சரி.

**டால்ஸ்** : என்னம்மா சொல்றே... மேன் ஆண்ட் மாஸ்டரை பற்றிச் சொல்றியா?

**அலெக்ஸ்** : ஆமாம். இந்த வீட்டுக்கு மாஸ்டர் நீங்களா, அம்மாவா? எனக்கு இப்பவே தெரிஞ்சாகணும்.

**டால்ஸ்** : நான் மேன் (Man), ஐ ஆம் எ மேன் (I am a man). அப்படீன்னா தலைப்புப்படி அம்மாதான் மாஸ்டரா இருக்கணும்... மன்னிச்சுடம்மா!

**அலெக்ஸ்** : மனைவியை அனுதாபத்தோட பார்க்கிற ஒரு கணவனை மன்னிச்சிடலாம்; பெற்ற பிள்ளைகள் மீதுள்ள அன்பால் சிலசமயம் பித்துக்குளி மாதிரி

நடக்கிற என் தந்தையை மன்னிச்சிடலாம்... ஆனா உலகமெல்லாம் தன் வீடுன்னு சொல்லிக்கிட்டு இப்போ ஒரு வீட்டையே உலகமா நினைச்சு மனைவிக்குப் பயப்படுற டால்ஸ்டாயை என்னாலே மன்னிக்க முடியலே. 1881-க்குப் பிறகு நான் எழுதுகிற எதையும் யார் வேண்டுமானாலும் வெளியிடலாம்னு பகிரங்கமா அறிவிச்சிட்டு இப்போ மனைவிக்கு இரகசியமா கதை கொடுக்கிற ஒரு முரண்பாடான டால்ஸ்டாயை நான் மகள் என்கிற முறையில் பார்த்தாலும் என்னால மன்னிக்க முடியல. நல்லா நினைச்சுப் பாருங்க அப்பா... உங்களுக்காக எத்தனையோ பேர் நாடு கடத்தப்பட்டிருக்காங்க. உங்களை ஞானத் தந்தையாக நினைத்து உலகத்தின் மூலை முடுக்கில் இருந்து வந்துக்கிட்டிருக்காங்க... எதுக்காக? டால்ஸ்டாய் என்கிற பிரபுவைப் பார்க்கவா? இல்லை சொத்தை துன்பமாக நினைத்து-- எழுதியபடி வாழ நினைக்கிற ஒரு யோகியைப் பார்க்கத்தான் வர்றாங்க; ஒரு மனிதனைப் பார்க்க வர்றாங்க... நீங்க அதுக்குள்ள தகுதியை இழந்துட்டீங்க அப்பா!

**டால்ஸ் :** அவளிடமிருந்து நான் தப்பவேண்டும்... எனக்கு வேண்டியது நிம்மதி... இந்த நன்மைக்காக ஒரு தீமையை விலையாகக் கொடுத்துட்டேன். தீமையை எதிர்க்கலாகாது என்ற என் எண்ணப்படி அந்தத் தீயவளுக்கு... ஆண்டவனே... என் வாயில் ஏன் தீய வார்த்தையை வரவிடுறே... சோன்யா தீயவள் அல்ல... என் மனைவி-- எனக்காக உயிரையும் விடத் தயாராக இருப்பவள்.

**அலெக்ஸ் :** அதோடு உயிரை எடுக்கவும் தயாராய் இருப்பவள்.

*(பண்ணையாள் ஒருவன் அழுதுகொண்டே வந்து டால்ஸ்டாயின் கால்களைக் கட்டிக் கொள்கிறான்.)*

**ப.ஆள் :** பிரபு! என்னை நீங்கதான் காப்பாத்தணும். எங்களில் ஒருவராக வாழும் எங்கள் பிரபுவே... இந்தக் கொடுமையை நீங்கதான் போக்கணும்!

**டால்ஸ் :** இந்தா பாரு... என்னை நீ பிரபுன்னு சொல்ற வரைக்கும் உன்னோடு பேசப் போறதில்லே. டால்ஸ்டாயின்னு பேர் சொல்லிப் பேசு... எது பேசினாலும் கேட்கிறேன்!

**ப.ஆள் :** டால்ஸ்டாய்! என் மகன்... உங்கள் பண்ணை யாள் ஏதோ ஒரு மரத்தை வெட்டினான்னு உங்க மனைவி வேலைக்கு அமர்த்தியிருக்கும் அரசாங்க போலீஸ் அவனை அடி அடின்னு அடிக்கிறான். என் மகன் அரை மயக்கமாய் கிடக்கிறான். இப்போ அவனை போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக்கிட்டு போகப் போகிறேன்னு இடுப்பிலே மிதிச்சான்... என் மகளை தரதரன்னு இழுத்துக்கிட்டுப் போறான். டால்ஸ்டாய் நீங்கதான் காப்பாத்தணும்.

**அலெக்ஸ் :** பாத்தீங்களா உங்களுக்காக உயிரைவிடத் தயாராக இருக்கும் உங்க மனைவியோட வேலைய-சரியான ராட்சஸி!

**டால்ஸ்** : ஆண்டவனே! கொடுமைக்கும் ஓர் எல்லை யில்லையா அலெக்ஸான்ட்ரியா- உடனே ஓடிப்போயி அந்த அப்பாவியைக் காப்பாற்று... போம்மா.

*(அலெக்ஸாண்ட்ரியா பண்ணையாளுடன் வெளியே விரைகிறாள். உள் அறையிலிருந்து சோன்யா வருகிறாள்.)*

**சோன்யா** : அப்பாவும் மகளும் ஏதோ பேசிக்கிட்டு இருந்தாப் போல இருக்கு.

**டால்ஸ்** : பேசலம்மா.. கண்முன்னாலே நடக்கிற ஒரு அநியாயத்தைக் கண்டிக்க இயலாத ஒரு கோழையை ஒரு வீரப்பெண் கண்டிச்சு இருக்கிறாள் அவ்வளவு தான். சோன்யா உன் கொடுமைக்கும் ஒரு வரம்பு வேண்டாமா? குடியானவனை இப்படியா அந்தத் தடியனை வச்சு அடிக்கிறது? குடியானவர்கள் உன் கொடுமையை நினைத்துப் பார்க்க ஆரம்பித்தால் நீ இங்கு இருக்க முடியுமா? கட்டுப்பட்ட கடல் பொங்கினால் என்ன ஆகும்? மலைகள் குதிக்கத் துவங்கினா என்னாகும்? இவர்கள் புரட்சி செய்ய லெனின் தேவையில்லை... மார்க்ஸிம் கார்க்கியின் எழுத்தும் தேவையில்லை... உன்னை மாதிரி ஆறு சோனியாக்கள் இருந்தா போதும்... இரத்த ஆறு ஓடும்... ஓடத்தான் போகிறது.

**சோன்யா** : ஓடுமோ, ஓடாதோ... அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. என் தோட்டத்து மரத்தை வெட்டின வனை நான் சும்மாவிடப் போவதில்லை. அவனை

வெட்டாம விட்டதுக்காகவே எனக்கு அவனுங்க நன்றி சொல்லணும்!

**டால்ஸ்:** ஒருநாளைக்கு என்னை நீயே விரட்டப் போறேன்னு நினைக்கிறேன் சோன்யா... யாரையாவது உன்னால் அடிக்காமல் இருக்க முடியாதுன்னா இதோ நான் இருக்கிறேன்... என்னை என்ன வேணுமின்னாலும் பண்ணு.

**சோன்யா :** லியோ, நீங்கதான் யோகியாச்சே! சொத் தெல்லாம் எங்களுக்குப் பிரிச்சுக் கொடுத்திடுங்க. இப்போ அந்தச் சொத்தைப் பாதுகாக்கிற நான் என்ன வேணுமுன்னாலும் பண்ண முடியும். இது என்னோட உரிமை... நீங்க தலையிட உரிமை இல்லை. புரியுதா?

**டால்ஸ் :** புரியுதும்மா புரியுது. சொத்துக்கள் தனியாரிடம் இருப்பது தீமை என்று உபதேசம் செய்துட்டு அதே தீமையை உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் பிரிச்சுக் கொடுத்தா இந்தத் தீயவனுக்கு இந்தத் தண்டனை பத்தாது. சோன்யா - சொத்து உரிமை ஒரு தீமை... அது நம்மையே எரிக்கும் நெருப்பு... என் மனைவி என்னைவிட பெரியவளாய் ஆகணும்... அதுதான் என் சுயநலம். பேசாமல் நிலத்தையெல் லாம் குடியானவங்களுக்குப் பிரிச்சிக் கொடுத் துடும்மா!

**சோன்யா :** நல்லவேளை. சொத்துன்னதும் எனக்கு ஞாபகத்துக்கு வந்துட்டுது. லியோ. நான் சொல்றதைக் கேளுங்க. நீங்க என் சொத்து, ஆகையால் நீங்க

படைக்கிற சொத்து இந்தக் குடும்பச் சொத்து. இதைப் பிரத்தியாருக்குக் கொடுக்க உங்களுக்கு உரிமை இல்லை. உங்க டயரியை அந்தத் திருட்டு செர்ட்கோவ் மூலம் இன்டர்மீடியறி பத்திரிகைக்குக் கொடுத்தீங்கன்னா அந்த டைரியை வச்சு அவன் பணம் பண்றதை என்னாலே பார்த்துக்கிட்டு இருக்க முடியாது. எனக்கு இப்பவே அந்த டைரி வேணும். எனக்குப் பணம் தேவையாய் இருக்கு.

**டால்ஸ் :** நான் பண்ணையாளை ஏன் அடிச்சேன்னு கேட்டா, நீ பணம் பண்றதுக்கு வழி சொல்றே சோன்யா... இதுக்கு மேலே என்னாலே தாங்க முடியாது... நீ... தயவுசெய்து வெளியே போயிடு. வெளியே போடீ...

**சோன்யா :** (அழுதுகொண்டே) போரும் சமாதானமும் எழுதத் தூண்டின இந்த மனைவியையா வெளியே போகச் சொன்னீங்க? ஒரு வருஷமா எழுதுன உங்களை முட்டையை அடைகாப்பது மாதிரி அடைகாத்த என்னையா வெளியே போகச் சொல்றீங்க? பஞ்சத்தைப் பற்றி எழுதி அரசாங்கத் திடம் எக்கச்சக்கமா மாட்டிக்கிட்ட போது, ஜார் மன்னரிடம் போய் முறையிட்டு உங்களைக் காப்பாற்றிய நானா வெளியே போகணும்? பதிமூணு பிள்ளை பெற்ற என்னையா வெளியே போகச் சொல்றீங்க? என் அன்புக்கு இதுதான் நீங்க தரும் ஊதியமா? கடவுளே! பகவானே இந்தக் கொடு

மையை என்னாலெ தாங்க முடியலையே... தாங்க முடியலையே...

**டால்ஸ் :** சோன்யா - நம்ம கோர்டீய் (Gordie) உனக்குத் தெரியுமா?... உனக்குத் தெரிஞ்சிருக்க முடியாது... ஏன்னா அவன் குடியானவன். ஒருநாள்... என் மனைவி செத்துப் போனாள்னு சொல்லி அழுதான்; இளம் பெண்ணான்னு கேட்டேன்... எனக்கும் மூத்தவள்னு சொன்னான்; காதல் திருமணமான்னு கேட்டேன்... கட்டாயத் திருமணம்னு சொன்னான்; நல்லா பணிவிடை செய்றவளான்னு கேட்டேன்... இல்லை, பத்து வருஷமா படுக்கையிலே கிடந்தாள் னான். பிறகு ஏன் அவள் இறந்ததுக்கு வருத்தப் படறேன்னு கேட்டேன். நான் வீட்டுக்கு வந்ததும் என்னை அன்போடு பார்த்து, ‘சாப்பிடு கோர்டீய்’ என்று கேட்பாளே... அதுமாதிரி இனி யார் கேட்கப் போகிறான்னு அழுதான். புரியுதா சோன்யா... நீ எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கே, இல்லேன்னு சொல்லலே, இருந்தாலும் ஒண்ணுக்கும் பிரயோஜனமில்லாமே போன கோர்டீய் மனைவியோட அன்பு முன்னாலே உன் அன்பு வெறும் தூசி! அன்பு செயல்லே இருக்கிறது. வரவேண்டியதெல்லாம் மனசிலயிருந்து வரணும்.

**சோன்யா :** ஒஹோ... ஒரு குடியானவன் மனைவியைவிட நான் கேவலமா போயிட்டேனா? அய்யோ... என் புருஷன் இருக்கிற சொத்தையெல்லாம் ஊராருக்குக் கொடுத்துட்டு என்னை அம்போன்னு நிக்கவச்சது மட்டுமில்லாமே... என்னை அன்பில்லாதவள்னு

சொல்லிட்டாரே... பரம பிதாவே... என்னாலே இந்தக் கொடுமையை தாங்க முடியாது. என்னை கூட்டிக் கிட்டுப் போங்க... கூட்டிக்கிட்டுப் போங்க...

**அலெக்ஸ் :** (வந்துகொண்டே) நீ அவ்வளவு சீக்கிரமா போகக் கூடாதம்மா... நீ குடியானவர்களை செய்திருக்கிற கொடுமைக்கு அவங்க கையாலையே நீ சாகணும்.

**டால்ஸ் :** அலெக்ஸாண்ட்ரியா... அவள் உன் அம்மா!

**அலெக்ஸ் :** இவளா என் அம்மா... ச்சீ... ராட்சஸி... பேயைவிட இரக்கமில்லாத மனிதப் பேய்!

**டால்ஸ் :** அலெக்ஸாண்ட்ரியா... அவள் என் மனைவி. (ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு) ம்... அப்புறம் அந்தக் குடியானவனைக் காப்பாற்றினாயா?

**அலெக்ஸ் :** அந்தக் கொடுமையை ஏன் கேக்கறீங்க... ஒன்றும் அறியாத அப்பாவியை அந்த முரட்டுப் பிசாசு தரதரன்னு இழுத்துக்கிட்டுப் போனான், நான் அவனை வழிமறித்துக் கண்டபடி திட்டிட்டேன். அவன் என்னடான்னா, ஒரு அரசாங்க அதிகாரியை சட்ட ரீதியான கடமையில இருந்து தடுத்த குற்றத்துக்காக என் மேலெ கேஸ் போடப் போறானாம். நாளைக்கோ மறுநாளைக்கோ கோர்ட்டிலே ஆஜராகணுமாம். எல்லாம் இந்த மகாப் பெரிய அம்மாவாலே...

**சோன்யா :** நீ எதுக்குடீ அங்கெ போனே? மரத்தை வெட்டின குடியானவப் பயலை... அவன் இழுத்துக்

கிட்டுப் போனா உனக்கென்னடீ வந்தது... உனக்கு இதுவும் வேணும்... இதுக்கு மேலேயும் வேணும்.

**டால்ஸ்** : சோன்யா... அவள் என் மகள்.

**அலெக்ஸ்** : இதப்பாரு... உன் பேச்செல்லாம் அப்பா கிட்டெ வச்சுக்கோ. எங்கிட்டே பேசினா மரியாதை இல்லாம போயிடும்.

**சோன்யா** : லியோ... பாத்தீங்களா அவள் பேசறதை! இதையும் கேட்டுக்கிட்டிருக்கீங்களே; நீங்கதான் அரக்கனாச்சே.

**அலெக்ஸ்** : அப்பாவ அப்படிப் பேசாதே! அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்.

**சோன்யா** : என்னடீ செய்வே.. என்னைவிட உனக்கு அவர் மேலே அதிக உரிமையோ?... அவரோட பதிமூணு பிள்ளை பெத்தவடீ நான்.

**அலெக்ஸ்** : இனிமே உன் புருஷன்கிட்டே அதாவது என் அப்பாகிட்டெ... சண்டை போடும்போது பதிமூணுன்னு சொல்லாதே... பன்னிரெண்டுன்னு சொல்லு. ஏன்னா... இனிமே நான் உனக்குப் பிள்ளை இல்லே!

**டால்ஸ்** : அலெக்ஸாண்ட்ரியா! அம்மாவுக்கு நீயும் மகள் தான், இப்படிப் பேசலாமா?

**அலெக்ஸ்** : மன்னிச்சிடுங்க அப்பா... பதிமூணு பிள்ளைங் கன்னு உரிமையோட பேசற இந்த அம்மா என்னை

அவள் பிள்ளையா சேக்காட்டி, அவுங்க உங்களைப் பேசற பேச்சிலே பதிமூனிலெ ஒரு பங்கு குறைய லாம்னு நினைக்கிறேன்.

**சோன்யா :** நான் உன்னை சுமந்து பெத்தவடீ...

**அலெக்ஸ் :** அந்தப் பாவத்தைத்தான் நான் சுமந்துகிட்டு இருக்கேனே... நீ வேறே சொல்லிக் காட்டணுமா? ஒரு குடியானவனை நீ அமர்த்தியிருக்கிற போலீஸ் காரன் உன் தூண்டுதலினாலேயே அடிச்சு நொறுக்கி யிருக்கிறான்; தடுக்கப் போன என் மேலே வழக்குப் போடப் போறானாம்! இவ்வளவையும் கேட்டுக்கிட்டு ரசிக்கிற மாதிரி இருக்கிற நீ பெண்ணே இல்லே... அப்புறம் எப்படி அம்மாவா ஆக முடியும்? அப்பா, இனிமேலே இந்த வீட்டிலே ஒரு வினாடிகூட இருக்க முடியாது. இந்த அம்மா என்னைப் பேசறதை என்னாலே சகிச்சுக்க முடியும்... ஆனா உங்களைப் பேசறதைக் கேட்டுக்கிட்டு என்னாலே இருக்க முடியாது... நான் கொலைகாரியா மாற விரும்பலே. அதனால நானும் என் ஸ்நேகிதியும் என் பண்ணைக்குப் போறோம். நீங்க என்னை அங்கே வந்து பாருங்க. நான் வரட்டுமா அப்பா...

**சோன்யா :** போணுமின்னா போயேன்... ஏண்டீ மிரட்றே.

**அலெக்ஸ் :** இனிமே 'டீ' போட்டு பேசினா மரியாதை யைக் கெடுத்துக்குவே... ஏன்னா நான் உனக்கு மகள் இல்லே. (துக்கத்தை அடக்கிக்கொண்டு) நா..ன்... வறேம்பா. (சற்று நடந்து திரும்பிப் பார்த்து) அப்பா, நீங்க எப்ப வேணும்னாலும் என் பண்ணைக்கு

வரலாம். மேடம் சோன்யா, தயவுசெய்து என் அப்பாவை அதிகமாகக் கொடுமைப்படுத்தாதீங்க– இது உங்க நலத்துக்காக சொல்ற வார்த்தை. போலீஸ்காரனுக்கு சாட்சி சொல்ல வருவீங்களே அப்போ உங்களைக் கோர்ட்டிலே சந்திக்கலாம்னு நினைக்கிறேன். (டால்ஸ்டாயை நோக்கி விம்மிய குரலில்) தாயில்லாம போன இந்தப் பெண்ணு போயிட்டு வரேன் அப்பா.

*(அலெக்ஸாண்ட்ரியா போகிறான் —
டால்ஸ்டாய் விரக்தியோடு சிரிக்கிறார்)*

**சோன்யா :** இது எல்லாத்துக்கும் காரணம் நீங்கதான்... குழந்தையை வளர்க்கத் தெரியாம வளர்த்து குட்டிச் சுவராக்கிட்டீங்க! போறாளாம்-- போனா போகட்டுமே! நீங்க எழுதினதெல்லாம் ஊராருக்குக் கொடுங்க. இப்போ நாம ரெண்டு பேரு சேர்ந்து எழுதினதும் ஊரார் பிள்ளையா போயிட்டுது... எல்லாம் உங்களால... (போகிறாள்)

**டால்ஸ் :** (தனிமையில்) அலெக்ஸாண்ட்ரியா... போயிட்டி யாம்மா... நீயும் போயிட்டியாம்மா... நான் கண்ணுக் குள்ள கண்ணா வளர்த்த மூத்த மகன் 'டான்யா' (Tanya) 32 வயசில கல்யாணம் பண்ணிக்கிட்டுப் போனான்; மனச்சாட்சியாய் இருந்த அருமை மகள் 'மர்யா' (Marya) இறந்து போனாள்; 'மாஷா'வும் (Masha) அவளோட குடும்பத்துக்குள்ளே விழுந் திட்டாள். நான் பெற்ற மகன்களே.. ஏன் பெற்றேங்கிற மாதிரி பேசறாங்க. என்னுடைய நிஜத்தைக் கண்ட

இளைய மகன் ஏழு வயசிலேயே என்னை விட்டுட்டு இறந்துட்டான். உன் அம்மாவுக்கோ என்னைவிட அந்தப் பாடகன் ஒசத்தியாய் போயிட்டான். கடைசி பெண்ணான உன்னை மலைபோல நம்பியிருந் தேன்... நீ மலையையே என் மேலே போட்டுட்டு போறியேம்மா... போ. நான் தனியாத்தான் நிக்கறேனே தவிர தனிமைப்படலம்மா; இந்தக் குடியானவர் களும்... மண்ணும் மலையும்... மரம் செடியும் இருக்கும்வரை நான் தவிக்கமாட்டேம்மா... தவிக்க மாட்டேன்.

*(துக்கத்தை அடக்கிப் பெருமூச்சு விடுகிறார்.)*

# காட்சி - 3

**இடம் :** தோட்டம்

**நேரம் :** மாலை வேளை

**பாத்திரங்கள் :** டால்ஸ்டாய் — மாக்ஸிம் கார்க்கி — சோன்யா.

(டால்ஸ்டாய் உலவுகிறார்— கார்க்கி வருகிறார்)

**டால்ஸ் :** (திரும்பிப் பார்த்து) கார்க்கியா! வா... வா... பார்த்து ரொம்ப நாளாச்சு. அடிக்கடி வரக்கூடாதா... வர முடியலையா... வர இஷ்டமில்லையா?

**கார்க்கி :** ரெண்டும்தான் காரணம். நீங்க ஒரு சூரியன்... கண்ணில் பட்டதையெல்லாம் எரிக்கிறதோட தன்னையே எரிச்சிக்கிடற சூரியன்... இந்த சூரியன் கிட்ட அகலாமலும் அணுகாமலும் இருக்க விரும்பறேன். (டால்ஸ்டாய் உற்றுப் பார்க்க) ஏன் என்னை அப்படி உற்றுப் பார்க்கறீங்க!

**டால்ஸ் :** (உற்றுப் பார்த்தபடி) கார்க்கி எனக்கு ஒரு சந்தேகம்... நீ குழந்தையாகவே இருந்திருக்க மாட்டேன்னு நினைக்கிறேன். பிறக்கும்போதே பெரிய ஆளாவே பிறந்திருப்பியோ என்பது மாதிரி ஒரு பிரமை. உண்மையிலேயே நீ ஒரு அதிசயப் பிறவி.

என்னை மாதிரி மது அருந்தறதில்லே... அதுபோல இதர பழக்கங்களும் கிடையாது; நானாவது கெட்டுத் திருந்தினவன்... நீயோ கெடுதியையே திருத் துறவன். ஆனால் உன்னையும் என்னால புரிஞ்சிக்க முடியலே.

**கார்க்கி :** தீமையை எதிர்க்கக்கூடாது என்று உபதேசம் செய்யும் உங்களால நான் எழுதறதைப் புரிஞ்சுக் கிட்டாலும் ஜீரணிக்க முடியாது. போகட்டும். நான் எழுதின 'லோவர் டெப்த்' (Lowr Depth) அதல பாதாளம் படிச்சீங்களா?

**டால்ஸ் :** படிச்சேன்... பிரமாதம்... ஆனால் ஒரு விஷயம் எனக்குப் பிடிக்கலே.

**கார்க்கி :** என்னது?

**டால்ஸ் :** கிராம மக்களை நீ சரியா புரிஞ்சுக்கலேன்னு நினைக்கிறேன். நீ எழுதியிருக்கிறது மாதிரி கிராம மக்கள் அப்பாவிகளும் இல்லை. எதையும் நேரடியாகவும் பேசமாட்டாங்க. நம் மக்கள் மகா புத்திசாலிகள்... அந்நியன் ஒருவனை, குறிப்பா படிச்சவனைப் பார்க்கும்போது அவங்க ஒண்ணும் தெரியாத முட்டாள் மாதிரி பாவலா பண்ணுவாங்க... அப்பத்தானே ஆசாமி எல்லாத்தையும் கக்குவான். படிச்சவன் பேசுறதுக்கெல்லாம் தலையாட்டியாட்டி அவங்களே ஒரு முடிவுக்கு வருவாங்க. அநேகமாக அது படிச்சதா நினைக்கிறவங்களை பைத்தியமாக்கற முடிவா இருக்கும்.

**கார்க்கி** : ரொம்ப நன்றி. கிராம மக்களை அவர்கள் இயல்புபடி காட்டறது தேவைதான். ஆனால் அதுவே இலக்கியமாயிராது. கிராமிய சூழ்நிலையை மட்டும் அப்படியே வர்ணிக்கிறதாக இருந்தால் காசு போட்டு எதுக்காக நாவல் வாங்கணும்? பேசாம அந்தக் காசிலே கிராமத்துக்கே போயிட்டு வரலாமே. அதனால கிராம மக்கள் எப்படி இருக்காங்க என்பதைக் காட்டுறதோடு எப்படி இருக்கணும்னும் காட்டணும். சமூக பிரக்ஞையுள்ள எழுத்தாளன் அப்படித்தான் எழுதணும்னு நினைக்கிறேன். அப்படி ஆகிறதுக்கு முயற்சி பண்றேன். இருந்தாலும் நீங்க சொல்றதுமாதிரி இன்னும் இயல்பா எழுத முயற்சி செய்றேன்.

**டால்ஸ்** : உனக்கு சிறப்பான எதிர்காலம் இருக்கு... அதனால்தான் சொல்றேன். ஒரு எழுத்தாளனுக்கு என்னெல்லாம் வேண்டுமோ, அவை உன்கிட்ட இருக்கு. எழுதறவனுக்கு மூன்று அம்சங்கள் தேவை: முதலாவது என்ன சொல்லப் போகிறோம் என்பது... இரண்டாவது ஒரு அந்நியோன்யம்... மூன்றாவது நடை. முதல் இரண்டும் ஒழுங்கா இருந்தால் மூன்றாவது தானா வந்துடும்... ஒண்ணு தெரியுமா உனக்கு? நம் கிராம மக்கள், நாலு-- மூணைவிட பெரிசா இருக்கிறவரைக்கே மூணாவது நம்பர்... நாலாவது நம்பரைவிட பெரிசா சிறுசாங்கிறதைப் பத்திக் கவலைப்படமாட்டாங்க... புரியுதா கார்க்கி...

**கார்க்கி** : புரியுது மாஸ்டர். இதுல என் பார்வைதான் தங்களுக்குப் புரியமாட்டேங்குது. குடியானவன், நாலு

மூணைவிட பெரிசா இருந்தால் நம்பரைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறது மாதிரி... வயிற்றுக்கு சோறு கிடைச்சா இதர விஷயங்களைப் பற்றிக் கவலைப்படறதுல்லே. அதனால்தான் பணக்காரங்க அவங்களுக்கு சாப்பாடு போட்டே அவங்களைச் சாப்பிட்டு விட்டாங்க. இதைத் தெரியப்படுத்தணும். நாலு மூன்றைவிட சிறுசாயும் ஆயிடும் என்பதைச் சுட்டிக் காட்டணும். பெரும்பான்மையோரான ஏழைகள், சிறுபான்மை பிரபுத்துவாதிகளால் நசுக்கப்படுற, சாதாரண உண்மையை, அசாதாரண மாய் சொல்லி, சாமான்ய மக்களையும் மகத்தான வர்களாய் மாற்றணும். அதுதான் என் வேலை. இலக்கியம் தனிமனிதனின் புலம்பலல்ல-- சமுதா யத்தின் பிரதிபிம்பம். அதோட சமுதாயத்தை வளரச் செய்யும் ஒரு பரிணாமக் கருவி... இல்லையா?

**டால்ஸ்** : உண்மைதான் கார்க்கி. உன்கிட்ட நான் ரசித்தது... யதார்த்தம், முற்போக்கு. எழுத்து ஒரு சத்தியம், ஒரு வேதம். அதை உபயோகிக்கிறவன் உபாசிக்கிறபடி உபாசித்தால் அது நிச்சயம் பலிக்கும். இதை குடிகாரங்க என்னதான் எழுதினாலும், அவன் குடிவெறி மாதிரி மை காயும் முன்னயே எழுத்தும் காஞ்சுடும். இன்னொரு வகை... இவங்களுக்கு செக்ஸ் தவிர எதுவுமே தெரியாது. பொம்பளை பேர்லயும் எழுதுவான் பெண்டாட்டி பேர்லையும் எழுதுவான்... அப்பாவி மனைவிகள்... பேட்டிகூட கொடுக்கச் சொல்லுவாங்க. இவங்க கௌரவ விபசாரிகள்... காசுக்கு விபசாரம்

பண்றவங்களை மன்னிச்சுடலாம்... ஆனா இந்த கௌரவ விபசாரிகளை மன்னிக்க முடியாது. ஆனால் நீ அப்படியல்ல- ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கத் துடிக்கிற பாட்டாளி! உனக்கு இலக்கியம் ஒரு போர்வாள்-- அந்தப்புரமல்ல. ஆனால் உன்னோட புரட்சியையும் உன் நாத்திக வாதத்தையும் கடவுள் நம்பிக்கை கொண்ட என்னால் புரிஞ்சுக்க முடியலே.

**கார்க்கி :** நீங்க தப்பா நினைக்கலேன்னா உள்ளதை சொல்றேன் மாஸ்டர். நீங்கள் கடவுள்வாதியல்ல. நமக்கு மேலேயும் ஒரு கடவுளான்னு நினைக்கிற... அதே சமயம் ஆணவமில்லாத மனிதன். உங்கள் கொள்கைப்படி ஒரு சமுதாயம் அமைந்தால் அது ஆபத்தானது என்று நினைக்கிறவன் நான். அதே சமயம் இந்த நாட்டில் தோன்றப் போகிற புரட்சிக்கு லெனின் சொன்னதுபோல நீங்க அதைப் பிரதி பலிக்கும் கண்ணாடி. நம்நாட்டில் சமதர்ம சமுதாயம் மலரத்தான் போகிறது. பாட்டாளி மக்கள் ஆளத்தான் போகிறார்கள்... இந்தப் புரட்சி இதர நாடுகளையும் உலுக்கத்தான் போகிறது. பிரபுக்கள் பிச்சைக்காரர் களாகவும் பிச்சைக்காரர்கள் பிரபுக்களாகவும் ஆகத்தான் போகிறார்கள். பல அழியும்... சில பிறக்கும். அல்லது போய் நல்லது வரும். அந்தப் புரட்சிகரமான சமுதாயத்தில் செக்ஸை வியாபாரம் செய்யமுடியாத புரட்சிகரமான ரஷ்ய இலக்கியத்தில் இதே டால்ஸ்டாயின் பெயர் முதலாவதாகவும் முடிவாகவும் இருக்கும்.... இது சத்தியம்.

**டால்ஸ்** : கார்க்கி, இந்தக் கிழவனை நீ குழந்தையாய் ஆக்கிட்டே.

**கார்க்கி** : நான் கடவுள் நம்பிக்கை இல்லாத நாஸ்திக வாதிதான், இல்லேன்னு சொல்லலே. ஆனாலும் வெட்கப்படாமல் சொல்றேன்... நீங்கள் கடவுள் மாதிரி... ஆமாம் கடவுள்மாதிரி...

**டால்ஸ்** : கடவுள் நம்பிக்கை உள்ளவன் என்னைக் கடவுள் என்றான். அந்த போலி வார்த்தையைவிட, கடவுள் நம்பிக்கை இல்லாத நீ என்னை கடவுள் மாதிரின்னு சொல்றத பெருமையா கருதுகிறேன் கார்க்கி. ஓ... நான் குழந்தையாகிக்கிட்டே போறேன். புகழ் மயக்கத்துலே புழுவா மாறுறேன்... போகட்டும், உன் எஜமானியம்மா எப்படி இருக்கிறாள்?

**கார்க்கி** : மிஸ்ஸஸ் கார்நெட் (Mrs. Cornet)தானே. அந்த ராட்சஸி செய்ததைக் கேட்டால் பயந்துடுவீங்க.

**டால்ஸ்** : சும்மா சொல்லு... நானும் ஒரு ராட்சஸியோட தான் வாழறேன்... சொல்லு... எதுன்னா காதல் கீதல்...

**கார்க்கி** : காதலாவது கீதலாவது. அவள் வீட்ல மூன்று சகோதரிகள் வாடகைக்கு இருக்கிறது உங்களுக்குத் தெரியும். அந்தப் பெண்களை இவள் படாதபாடு படுத்தறாள். ஒருநாள் அந்தக் குடிகாரி என்ன பண்ணா தெரியுமா?

**டால்ஸ்** : சீக்கிரமாச் சொல்லு.

**கார்க்கி** : தாயில்லாத அந்த மூன்று பெண்களையும் ஒருநாள் மத்தியானம் திட்டினாள்... தோட்டத்துக்கு

வெளியே துரத்தினாள். அவங்க வாசல் பக்கம் ஓடினார்கள். இவள் அவர்களை வெளியே விடாமல் வாசலை மறைச்சிக்கிட்டு ஆபாசமா திட்டினாள். அந்த அப்பாவிப் பெண்கள் என்ன செய்யறதுன்னு தோணாமல் பயத்தோட மலங்க மலங்கப் பார்த்தாங்க. தோட்ட வேலைக்காரனான என்னால் தாள முடியாமல் யஜமானிகிட்ட போனேன். அந்தப் பெண்களைப் போகவிடும்படி சொன்னேன். உடனே 'நீ' அந்தப் பெண்களோட இரவிலே சந்தோஷமா இருக்கிறவன்னு சொல்லிட்டா.

**டால்ஸ் :** நீ அப்படி ஏதும் சந்தோஷமா இருந்தியா?

**கார்க்கி :** போங்க மாஸ்டர் - என்னைப் பார்த்தால் அப்படியா தோணுது?

**டால்ஸ் :** உன் முகம் காதல் முகமில்லே. இது புரட்சி முகம்... ம்... மேற்கொண்டு சொல்லு... நீ என்ன பண்ணுனே...

**கார்க்கி :** எனக்கு அவள் அந்தப் பெண்களை அப்படி நடத்தினதைப் பார்த்துக்கிட்டு இருக்க முடியலே. எவ்வளவோ சொன்னேன் கேட்கலே. அவளுகளை விட நான் அழகானவன்னு சொல்லி கவுனைக் கழற்றினாள்...

**டால்ஸ் :** இதுதான் க்ளைமேக்ஸ்... நீ என்ன மயங்கிட்டியா?

**கார்க்கி :** எனக்கு எதுவும் ஓடலே!

**டால்ஸ்** : இந்தமாதிரி சமயத்துலே ஓடாதுதான்.

**கார்க்கி** : நான் அந்த அர்த்தத்தில் சொல்லலே. என் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த முடியலே. அவளைப் பிடிச்சு இரண்டு சுத்து சுத்தினேன்... மண்வெட்டியால் ரெண்டு போடு போட்டேன். ஓ...ன்னு கத்திக்கிட்டே ஓடினாள். உடனே என் உடமைகளை எடுத்துக் கொண்டு வெளியேறினேன். அவள் ஜன்னல் பக்க மாக வந்து... 'கார்க்கி' நான் போலீஸ்லே சொல்ல மாட்டேன்... வந்துடு வந்துடுன்னு கெஞ்சினாள். நான் திரும்பிப் பார்க்காமல் போயிட்டேன்.

**டால்ஸ்** : இதுலேயிருந்து உனக்கு என்ன தெரியுது?

**கார்க்கி** : அவள் அரக்கி... குடிகாரி!

**டால்ஸ்** : அவள் உன்னைக் காதலிக்கிறாள். வேறு யாரா வது உன் இடத்தில் இருந்திருந்தால் இன்னேரம் அந்த விதவைப் பெண் ஒரு பிள்ளை பெற்றிருப் பாள்!

**கார்க்கி** : போங்க மாஸ்டர்... அவள்கிட்ட எனக்கு அந்த மாதிரி எண்ணமே கிடையாது.

**டால்ஸ்** : நீ அதிசயப் பிறவி... ஆனாலும் நல்லவன். காதல் செய்யத் தெரியாத அசடு... ஆனாலும் புத்தி சாலி.

**கார்க்கி** : அலெக்ஸாண்ட்ரியா எங்கே?

**டால்ஸ்** : எதையும் தாங்கும் என் செல்லக்கிளி என் வீட்டுக்காரியின் பேச்சைத் தாங்கமுடியாம என்னை

விட்டுட்டு போயிட்டா. கார்க்கி... ஏன் பேசமாட்டேங்கிறே?

**கார்க்கி :** இது உங்க குடும்ப விவகாரம். எனக்குப் பேச உரிமையில்லை.

**டால்ஸ் :** இதுக்குதான் நான் உன்னைப் பாராட்டறேன் கார்க்கி. அவள் போனதிலே இருந்து இந்த வீடே வெறுமையா இருக்கு... என் மகளை நான் மறுபடியும் பார்ப்பேனா கார்க்கி.

**கார்க்கி :** நீங்கள் கலங்கலாமா? சிறைக்குப் போகிறவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவதாகச் சொல்லும் நீங்கள் கலங்கலாமா? கடவுள் எனக்குக் கஷ்டத்தைக் கொடுக்கலையேன்னு அடிக்கடி புகார் செய்யும் நீங்கள் இந்தக் கஷ்டத்தைத் தாங்கமுடியாமல் புகார் செய்யலாமா?

**டால்ஸ் :** உண்மைதான் கார்க்கி... ஆண்டவன் கொடுத்த தண்டனை இது... இதை மீற எனக்கு உரிமையில்லை. (உட்புறம் பார்த்துவிட்டு) சரி, என் மனைவி வராள். அவள் பேச்சை நீ கேட்க வேண்டாம். கேட்கக் கூடாது. போயிட்டு வர்ரியா...?

**கார்க்கி :** போயிட்டு வரேன்.

*(கார்க்கி போகிறார்—சோன்யா வருகிறாள்.)*

**சோன்யா :** கார்க்கியோட பொம்புளை விஷயம் பேசினீங்க போலிருக்கே?

**டால்ஸ் :** ஆமாம். சில அரக்கிகளைப் பற்றி பேசிக்கிட்டிருந்தோம். சோன்யா, ஜார் அரசாங்கம் என்னைக்

கண்காணிக்க இரகசிய போலீஸ் போட்டிருக்கு. அது பத்தாதுன்னு நீயும் என்னை வேவு பார்க்க ஆரம்பிச்சுட்டே. சோன்யா, இந்த வேவு பார்க்கற வேலையை விட்டுடு. நானும் மனுஷன்தான்... அதோட உன் கணவன். மகளைத்தான் துரத்திட்டே, என்னையும் துரத்திடாதே!

**சோன்யா :** நானா துரத்தினேன்... இல்லே நீங்கதான் என்னைத் துரத்தறீங்க. அடகடவுளே... ஆகாத காலத்துலெ கால் பட்டா குற்றம் கை பட்டா குற்றம்ங்கிறது சரியாதான் இருக்கு. ஏதோ வயசான மனுஷன், பனியிலெ நனைஞ்சா உடம்புக்கு ஆகாதேன்னு பார்க்க வந்தேன்.

**டால்ஸ் :** அதோட பாங்கில் இருக்கிற என் டயரியையும் கேட்க வந்தே!

**சோன்யா :** அப்படியே வந்தாலும் அதில் என்ன தப்பு? அந்த டயரியிலே என்னைப்பற்றி என்னவெல்லாம் எழுதி இருக்கீங்களோ... யார் கண்டது? அது எனக்கு இப்போ வேணும். என்னைப்பற்றி எழுதியிருக்கிறதை என்னால் அனுமதிக்க முடியாது.

**டால்ஸ் :** டயரியிலே என்ன எழுதி இருக்கு என்பதைவிட, அதை எப்படிப் பணம் பண்றது என்கிறததான் உன் பிரச்சினை. பணம் உழைப்புக்குப் பிரதியாக இல்லாமல் உழைக்கும் வர்க்கத்தை சுரண்டுவோருக்கு பிரதியாய் இருக்கு.

**சோன்யா :** சுற்றி வளைச்சுப் பேசாதீங்க... அந்த டயரியை கொடுக்க முடியுமா முடியாதா?

**டால்ஸ் :** முடியாது முடியாது... முடியவே முடியாது.

**சோன்யா :** முடியாதா... அடகடவுளே... என் புருஷன் எனக்கில்லாம போயிட்டாரே! உயிரோட செத்துப் போயிட்டாரே! இருந்தும் பிரயோஜனமில்லாம இறந்தும் பிரயோஜனமில்லாம போயிட்டாரே. நான் இனிமே உயிரோட இருக்கப் போறதில்லெ... ஆற்றிலே விழுந்து சாகப் போறேன்! தூக்குப் போட்டு சாகப் போறேன்! விஷத்தைக் குடிச்சு சாகப் போறேன்!

**டால்ஸ் :** இந்த மூன்றையும் நீ ஒரே சமயத்தில் செய்... அப்பகூட நீ சாகமாட்டே!

*(சோன்யா, கோபமாக வெளியேறுகிறாள். டால்ஸ்டாய் வெறுமையாகச் சிரிக்கிறார்.)*

# காட்சி - 4

*இடம் : டால்ஸ்டாய் அறை.*

*நேரம் : மாலைப் பொழுது.*

*பாத்திரங்கள் : டால்ஸ்டாய் — செர்ட்கோவ்— அலெக்ஸாண்ட்ரியா — சோன்யா.*

*(செர்ட்கோவ் அமர்ந்திருக்க, டால்ஸ்டாய் வருகிறார்)*

**செர்ட் :** உடம்பு எப்படி இருக்கு?

**டால்ஸ் :** பரவாயில்லே. நானும் பார்த்துக்கிட்டுதான் வரேன். எப்பவாவது எனக்கு வணக்கம் போடறியா? ஒருவேளை நான் போட்டபிறகுதான் போடறதுன்னு நினைக்கிறியா?

**செர்ட் :** இவ்வளவு நாளாய் வணக்கம் போடணுங்கறதே எனக்குத் தோணலே... மன்னிச்சுடுங்க.

**டால்ஸ் :** தமாஷுக்கு சொன்னேன். என்றைக்கு இரண்டு நண்பர்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் போடறத நிறுத்தறாங்களோ அப்போதான் அவுங்க நெருக்கமான நண்பர்களாக முடியும். நட்பு... ஆண் பெண் காதல் மாதிரி... நல்ல காதல் சதையைச் சுற்றி அமையாது.

**செர்ட் :** இன்றைக்கு வழக்கத்துக்கு மேலேயே சந் தோஷமா இருக்கீங்க.

**டால்ஸ் :** அதுக்குக் காரணம் இருக்கு செர்ட்கோவ். தென்னாப்பிரிக்காவில் ட்ரான்ஸ்வாலில் (Transval) இருந்து ஒரு ஹிந்து கடிதம் எழுதியிருக்கார்... எம். கே. காந்தி என்கிற இந்தியர். என்னை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறாராம். என் பேர்லயே டால்ஸ் டாய் பண்ணைன்னு ஒன்று வச்சிருக்கிறாராம், என்னை மானசீகமா நினைத்தே தென்ஆப்பிரிக்கா அரசின் இனவெறிக்கு எதிராய் போராட்டம் நடத்துறாராம். ஏனோ எனக்கே தெரியலே, அந்த ஹிந்துவை, இந்தியரை உடனே பார்க்கணும் போலிருக்கு. புழுக்கமா இருந்த என் மனசுக்கு அந்தக் கடிதம் தென்றல்மாதிரி வந்தது.

**செர்ட் :** நானும் கேள்விப்பட்டிருக்கேன்... அவர் இன் னொரு டால்ஸ்டாய் ஆகிக் கொண்டிருக்கிறாராம். பெர்நாட்ஷாகிட்ட இருந்து கடிதம் வந்ததா?

**டால்ஸ் :** வந்தது.

**செர்ட் :** ஏன் சலிப்பா சொல்றீங்க?

**டால்ஸ் :** பின்ன என்ன... மனுஷனுக்கு எல்லாமே வேடிக்கைதான். வாழ்க்கையை ரொம்ப லேசா எடுத்துக்கணும். வாழ்க்கை அவர் நினைக்கிறமாதிரி ஒரு நேர்கோடு இல்லே. அது ஒரு வட்டம்... சுயநலம் என்ற மையத்தைக் கொண்ட மனித வட்டம். ஒரு வட்டம் இன்னொரு வட்டத்தைத் தொடுறதும் உண்டு-

தொடக்கிறதும் உண்டு. இது அவருக்குப் புரியமாட்டேங்குது. பாசத்தை பாசாங்காய் நினைக்கிறார். நீயே சொல்லு... என் மகளின் பிரிவு தாங்காமல் நான் தவிக்கிறேனே... அந்த உணர்வு போலியா?

**சொர்ட் :** அலெக்ஸாண்ட்ரியா இப்போ வந்தால் என்ன செய்வீங்க?

**டால்ஸ் :** என்ன செய்வேன்னு இப்ப எப்படிச் சொல்ல முடியும்? என் உணர்வுகளை அதன் இயல்புபடி விடுவேன்.

**சொர்ட் :** அலெக்ஸாண்ட்ரியா வந்துட்டதாக கற்பனை பண்ணுங்க பார்க்கலாம்.

**டால்ஸ் :** வர வர... எனக்கும் கற்பனை நிஜமாகவும் நிஜம் கற்பனையாகவும் போயிட்டுதப்பா. இது வரைக்கும் அவள் என்கிட்டயே இருக்கிறதா கற்பனை பண்ணிட்டு இப்பொதான் நிஜத்துக்கு வந்தேன். என் அருமை மகள் அலெக்ஸாண்ட்ரியா வந்தால் நான் இன்னும் இருபது வருஷம் வரைக்கும் வாழலாம். இல்லேன்னா... இல்லேன்னா...

**அலெக்ஸ் :** அப்பா... அப்பா... (ஓடி வருகிறாள்.)

**டால்ஸ் :** மகளே! நான் காண்பது நிஜம்தானே... எனக்கு பைத்தியம் பிடிக்கவில்லையே... (மகளை அணைத்துக் கொள்ளுகிறார்.)

**அலெக்ஸ் :** உங்களைப் பிரிஞ்சிருந்த பத்துநாளும் எனக்குப் பத்து யுகமா தெரிஞ்சுதப்பா.

**டால்ஸ் :** மகளே! 'சொர்க்கம் உன்னுள்ளேயே இருக்கிறது' என்று எழுதின இந்த டால்ஸ்டாயின் சொர்க்கம் யாரிடம் இருக்கிறது தெரியுமா?... இதோ இந்த அலெக்ஸாண்ட்ரியாவிடம்தான் இருக்கிறது. மில்டனின் 'மீண்ட சொர்க்கம்' காவியத்தை உன்னை பார்ப்பதுமூலமே இப்பொ படிச்சுக்கிட்டிருக்கேம்மா.

**செர்ட் :** நான்தான் போய் இவளை சத்தம் போட்டேன். தள்ளாத வயதிலே தந்தையை தவிக்க விடலாமான்னு நல்லா திட்டினேன்.

**அலெக்ஸ் :** இவரு சத்தம் போடாட்டாலும் நான் வந்திருப்பேன் அப்பா. சொல்லப் போனால் இவரு என்னைத் திட்டினதால் நான் ஒருநாள் தாமதமா வந்தேன்.

*(டால்ஸ்டாய் சிரிக்கிறார்—தாய்ப்பாசம் பொங்க சோன்யா எட்டிப் பார்க்கிறாள்.)*

**டால்ஸ் :** வா சோன்யா, ஏன் அங்கேயே நிற்கிறே. இது உன் வீடு... வா... வந்து உன் மகளைப் பாரு.

**சோன்யா :** (தயக்கத்தோடு வந்து) நான்தான் உங்க எல்லாருக்கும் வேண்டாதவளா ஆயிட்டேனே... இருந்தாலும் இந்த பைத்தியக்காரியாலே தாய்ப் பாசத்தை அடக்க முடியலே. (விம்மிக்கொண்டே அலெக்ஸாண்ட்ரியா... என்னை எப்பவாவது நினைச்சியாம்மா.

*(மகளின் தலையை வருடிவிடுகிறாள்—மகள் அணைத்துக் கொள்கிறாள்.)*

**அலெக்ஸ்** : உன்னை என்னால் விரும்ப முடியாதுன்னு நினைச்சேன். ஆனா அது தப்புன்னு இந்த பத்து நாளிலே புரிஞ்சுக்கிட்டேனம்மா.

**டால்ஸ்** : பாத்தியா சோன்யா, பிள்ளைங்க கெட்டுப் போய் வீட்டைவிட்டு ஓடும்... இவள், நாம ரெண்டு பேரும் கெட்டுப் போனதாலயே ஓடினவள்... நீ எத்தனை தப்பு செய்தாலும் இவளைப் பெற்றுத் தந்த ஒரு செயலுக்காக நீ என்ன சொன்னாலும் நான் கேட்பேன்! கொஞ்சம் குடிக்க ஏதாவது அனுப்பறியா?

**சோன்யா** : இதோ, நானே கொண்டு வரேன் (சோன்யா உள்ளே போகிறாள்.)

**செர்ட்** : (டால்ஸ்டாயை நோக்கி) என்ன சொன்னாலும் கேட்பேன்னு சொல்லிட்டீங்க. அவங்க டயரியைக் கேட்பாங்க... கொடுப்பீங்களா? நீங்கள் எழுதின எல்லா படைப்புகளுக்கும் உரிமை வேணும்னு கேட்பாங்க கொடுப்பீங்களா? முன்னபின்ன யோசிக்காம பேசுறீங்க.

**டால்ஸ்** : ஒருவன் ஒருவர்கிட்ட முன்னாலேயே யோசித்து விட்டுப் பேசினால் அந்த ஒருவர் அவனுக்கு அதிகாரி யாய் இருப்பார். ஒருவர்கிட்ட பேசிட்டு அப்புறம் பின்னால் யோசித்தால் அந்த ஒருவர் அவனுக்கு வேலையாளாய் இருப்பார். முன்னபின்ன யோசிக் காமல் பேசினால் அவங்க கணவன் மனைவியாத் தான் இருக்க முடியும். செர்ட்கோவ் - நான் சமூக பிரக்ஞைக்கு முதலிடம் கொடுக்கிறேன். அவள் குடும்ப பிரக்ஞைக்கு முதலிடம் கொடுக்கிறாள்.

பிரச்சினையே அதுதான். பஞ்ச நிவாரண வேலை யில் அவள் எனக்கு உதவினதையோ, கிறிஸ்தவ மதத்திலிருந்து என்னை ஸைநாட் (Synod) தள்ளி வச்சபோது அவள் துடித்த துடிப்பையோ என்னால மறக்கவே முடியாது... அதோடு நான் காதலித்து மனைவியானவள். பாவம்... தான் பெற்ற பிள்ளைகள் வசதியா வாழணும்னு ஆசைப்பட்டு என்கிட்ட சண்டைக்கு வர்றவள்... அதிலென்ன தப்பு...

**அலெக்ஸ் :** அப்பா... இப்போது டால்ஸ்டாயிஸம், டால்ஸ் டாய் என்கிற விதையில ஒரு பெரிய ஆலமர மாயிட்டுது. இப்போ மரம்தான் முக்கியமே தவிர விதையல்ல... ஏன்னா அந்த மரத்துலே எத்தனையோ விதைகளை உள்ளடக்கிய பழங்கள் இருக்கு. ஜார் காக்காயும் குருவியும் கொத்தி நாசப்படுத்தினாலும், இன்னும் நல்ல பழங்கள் பழுதுபடாமல் இருக்கு. கிறிஸ்தவ மதத்தில் இருந்த பத்து கட்டளைகளைச் சுருக்கி, 'கோபப்படாதே-ஆசைப்படாதே-பிரமாணம் செய்யாதே-தீமையை எதிர்க்காதே-எதிரியையும் நேசி' என்று எப்போது டால்ஸ்டாய் சொன்னாரோ, அப்போதே டால்ஸ்டாயிஸம் பிறந்துட்டுது. என்றைக்கு சர்ச் உங்களை விலக்கி வச்சுதோ அன்றைக்கே அந்த இஸம் நடக்கத் துவங்கிட்டுது... நடக்கத் துவங்கின டால்ஸ்டாயிஸத்தை ஓட வச்சிடாதீங்கப்பா.

'இயேசுவை தெய்வமாய்ப் பார்க்காமல் சிறந்த மனிதனாய்ப் பாருங்கள்' என்று சொல்லி நீங்களே ஒரு இயேசு ஆயிட்டீங்க. சொத்துரிமை தீமை என்று சொல்லி

நீங்களே ஒரு சீர்திருத்தவாதி ஆயிட்டீங்க. 'என் படைப்புகள் எல்லாம் எல்லோருக்கும் சொந்தம்' என்று சொல்லி எல்லோருக்கும் பொதுச் சொத்தாய் ஆயிட்டீங்க. இதனால்தான் பெர்நாட்ஷா, காந்தி, ரோமன் ரோல்லான்ட் (Roman Rolland) முதலிய எல்லா மேதைகளும் நீங்க சொல்றத வேத வாக்காக் கருதறாங்க... டால்ஸ்டாயிஸம் டால்ஸ்டாயைவிடப் பெரியது... டால்ஸ்டாயே அதை எதிர்த்தாலும் நாங்கள் டால்ஸ்டாயிஸத்தைப் பாதுகாப்போம்... இல்லையா அங்கிள் செர்ட்கோவ்?

**செர்ட்** : இதிலென்ன சந்தேகம்.

**டால்ஸ்** : நான் அவள் பிரச்சினையை அனுதாபத்தோடு தான் பார்க்கச் சொன்னேனே தவிர அதை நிறைவேற்றச் சொல்லலே. நீங்க சொல்லும் முன்னாலேயே நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன். இரண்டு நாளைக்கு முன்னால் அந்த உயிலுக்கு சம்மதிக்கிறதாக முடிவெடுத்துட்டேன். என் காலத்துக்குப் பிறகு என் மகள் அலெக்ஸாண்ட்ரியாவிடம் என் படைப்புகள் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட வேண்டும். அவள் அதை செர்ட்கோவிடம் வெளியிடுவதற்காகக் கொடுக்க வேண்டும். இதிலிருந்து வருகிற வருமானத்தை ஏழை எளியவர்களுக்காகச் செலவிட வேண்டும். வக்கீலை வரவழைத்து கை எழுத்தும் போட்டுட்டேன்.

**அலெக்ஸ்** : 1881ஆம் ஆண்டுக்கு முன்னால் எழுதுனது எல்லாம் அம்மாவுக்கு சொந்தம்னு சொன்னீங்களே... அது...

**டால்ஸ் :** அந்த உரிமையும் என் காலத்துக்குப் பிறகு அவளுக்குக் கிடையாது. இனிமேல் உலகமே என் வீடு... எல்லோரும் இந்தக் கிழவனின் பிள்ளைகள்... நான் பிள்ளைகளுக்கிடையே பேதம் காட்டாத பெருந்தந்தை...

**அலெக்ஸ் :** அப்பா, உங்களை நினைக்கிறபோது எனக்குப் பெருமையாகவும் இருக்கு. பயமாகவும் இருக்கு. அம்மா உங்களை சும்மா விடுவாளா?

**டால்ஸ் :** ஆண்டவன் விட்ட வழி. சரி, உங்கம்மா பழைய படியும் ஒட்டு கேட்கிறாள் போலிருக்கு. நீங்க சீக்ரமா போயிடுங்க.

*(அலெக்ஸாண்ட்ரியா செர்ட்கோவுடன் போக)*

**சோன்யா :** (வந்து) என்ன லியோ... ஏதோ உயில் கியில்னு பேச்சுக் கேட்டது. ஏன் பேசமாட்டீங்கறீங்க... என்ன பேசினீங்க... சொல்லுங்க லியோ!

**டால்ஸ் :** சோன்யா, எனக்கு பொய் பேசத் தெரியா துன்னு சொல்லலே... நான் சொல்ல விரும்பலே... இது என் சொந்த விவகாரம். இதுலே நீ தலையிடக் கூடாது. கேட்டாலும் நான் சொல்லப் போறதில்லே.

**சோன்யா :** எனக்கு இப்போதான் புரியுது. அலெக் ஸாண்ட்ரியா வீட்டைவிட்டுப் போனதிலே ஒரு மர்மம் இருக்கு. இந்த வீட்லே ஏதோ சூது நடக்குது. சதி நடக்குது. எனக்கு இப்போ டயரி வேணும்... நீங்க எழுதின எல்லாமே வேணும்.

**டால்ஸ்** : மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்...

**சோன்யா** : நான் பேயா? இல்லை, என்னை பேயாய் ஆக்கிற நீங்கதான் பேய்! செர்ட்கோவ் ஒரு சூன்யக்காரன். உங்களை வசியம் பண்ணிட்டான். என் புருஷனை எனக்கில்லாம பண்ணிட்டான் நான் அவனை விடப்போறதில்லே-- கொலை பண்ணப் போறேன்-- இல்லை சாகப் போறேன்-- விஷத்தைக் குடிக்கப் போறேன். முடியாது... சாக முடியாது... என் மகன் லியோவைக் கூட்டிட்டு வரப் போறேன். இன்னைக்கு ரெண்டிலே ஒண்ணு பாக்கத்தான் போறேன். பாத்துடலாம்... பாத்துடலாமா? பாத்துடலாம்... லியோ! லியோ! என் மகனே லியோ!

*சோன்யா வெளியே விரைகிறாள்— டால்ஸ்டாய் இலேசாகத் தலையில் அடித்துக் கொள்கிறார்.)*

# காட்சி - 5

*இடம் : டால்ஸ்டாய் அறை.*

**நேரம்** : *இரவு வேளை.*

***பாத்திரங்கள்*** : *லியோ—டால்ஸ்டாய்—சோன்யா—டாக்டர் காஷா செர்டகோவ்.*

*(டால்ஸ்டாய் மேஜை அருகில் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார்—சோன்யா மகன் லியோவை அழைத்து வருகிறாள்.)*

**லியோ** : குடும்பத்தைக் கட்டிக் காப்பாற்றத் தெரியலே, பெரிய எழுத்து எழுதறாராம்! மனைவியைக் கலங்கவிடாமல் வைக்கத் தெரியலே... உபதேசம் பண்றாராம் உபதேசம்! அப்பா, அம்மாவை எதுக்காக வீட்டைவிட்டுத் துரத்தினீங்க?

**டால்ஸ்** : லியோ, நீ எனக்கு இளைய மகன்னு தெரியும்... இளைத்த மகன்னு நினைக்கலே. கொஞ்சம் மெள்ளப் பேசு-- எனக்குக் காது நல்லா கேட்குது. செவிடா யிருந்திருந்தா நல்லா இருந்திருக்கும்.

**லியோ** : கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்க... அம்மாவை எதுக்காகத் துரத்தினீங்க?

**டால்ஸ்** : நான் எங்கடா துரத்தினேன். அவளா புலம்பிட்டு அவளே போனாள்... என்னை என்ன பண்ணச் சொல்றே?

**லியோ** : நான் மட்டும் பார்க்காட்டா என்னைப் பெற்ற அம்மா... உங்களுக்கு மனைவியாகப் போய்... ஒரு பலனும் அடையாத இந்தப் பாவி இந்நேரம் செத்து இருப்பா... இந்தத் துப்பாக்கியை எடுத்து சுட்டுக்கிடப் போனாள்! (துப்பாக்கியை எடுத்துக் காட்டுகிறான்.)

**டால்ஸ்** : அந்த துப்பாக்கிய இப்படிக் கொடுடா. (வாங்கி தனக்கெதிராக வைத்து சுடுகிறார். வெடிப்பு சத்தம் மட்டும் கேட்கிறது.) பாத்தியாடா... இது விளையாட்டுத் துப்பாக்கி... உன் அம்மா விளையாடினாள்.

**சோன்யா** : ஆமாம். எனக்கு பதினாறு வயசு, உங் களுக்கு இருபது... விளையாடறேன்.

**லியோ** : அப்பா, குழந்தை மாதிரி நடிக்க வேண்டாம். இன்னிக்கு ரெண்டிலே ஒண்ணு தெரியணும்... தெரிஞ்சாகணும்.

**டால்ஸ்** : டேய், நீ குழந்தையாக இருக்கும்போது உனக்கு விளையாட்டு காட்டுறதுக்காக புலிமாதிரியும் ஓனாய் மாதிரியும் நடிச்சேன். இப்ப அந்தக் குழந்தை நிஜமாகவே ஒரு ஓனாயா மாறிடிச்சு. அது முன்னால என்னால நடிக்க முடியுமா? அப்போ நீ சந்தோஷமா, இருக்கிறதுக்காக நடிச்சேன். இப்போ நீ பெத்த அப்பனை புரிஞ்சுக்காம போனதுக்காக துடிக்கிறேன்.

**லியோ** : பெத்த அப்பன்... நீங்களா பெத்த அப்பன்?

**டால்ஸ்** : சந்தேகமா இருந்தா உன் அம்மாவையே கேளு.

**சோன்யா** : டேய் லியோ, இந்த கிழத்துகிட்ட பேசி நீ ஜெயிக்க முடியுமா... விஷயத்துக்கு வாடா...

**லியோ** : என்றைக்கு சொந்தப் பிள்ளைகளை ஊர்ப் பிள்ளைகளாகவும், ஊர்ப் பிள்ளைகளை சொந்தப் பிள்ளைகளாகவும் நினைச்சீங்களோ... அன்றைக்கே நீங்க எனக்கு அப்பா இல்லை... ரெண்டிலெ ஒண்ணு தெரிஞ்சாகணும்... அப்பா... உங்களைத்தான்...

**டால்ஸ்** : நான் அப்பா இல்லேன்னு சொல்லிட்டியே... பிறகு ஏண்டா அப்பான்னு கூப்படறே? உன் அம்மாவுக்குத்தான் நரம்புத் தளர்ச்சின்னு நினைச்சேன்... இப்போ உனக்கும் இருக்குன்னு நினைக்கிறேன்.

**லியோ** : எனக்கு நரம்புத் தளர்ச்சி இருந்திருந்தா இன்னேரம் உங்களைக் கழுத்தை நெறிச்சி கொன்னிருப்பேன்-- அம்மாவைத் துரத்துன உங்களைக் கழுத்தைப் பிடிச்சுத் தள்ளி இருப்பேன்.

**டால்ஸ்** : நாட்டிலே அவனவன் அநியாயக்காரனையும் ஏகபோகவாதியையும் அடிச்சு நொறுக்கி... அந்தப் புரட்சியிலே புதிய சமுதாயத்தை அமைக்கணுங்கறான்... நீ, ஏலாத கிழவனை-- பெத்த அப்பனையே அடிச்சு நொறுக்குவேன்னு சொல்றே! லியோ-- நீ தாண்டா உண்மையான புரட்சிவாதி!

**லியோ** : இப்படியே பேசிக்கிட்டுப் போனா... (சற்று வேகமாக.)

**சோன்யா** : டேய்... அதை அடிச்சுக் கிடிச்சு தொலைச்சுடாத... என்னால தாங்க முடியாதுடா...

**லியோ** : சும்மா இரும்மா... இந்த மனுஷனை என்ன பண்ணுனாலும் தகும்... கொலைகூட பண்ணலாம்.

(குடும்ப டாக்டர் (Ghasha) பதறிக்கொண்டு வருகிறார்.)

**டால்ஸ்** : டேய் லியோ, என்னையா கொலை பண்ணப் போறே... நான் உன்னை தொட்டிலிலே போட்டு ஆட்டும்போது சந்தோஷமா தலைகுனிந்தேன். பிறகு தோளிலே தூக்கி வைக்கிறதுக்காக சந்தோஷம் தாங்காமல் தலைகுனிஞ்சேன். இப்போ தலைக்கு மேலே தறிகெட்டு வந்ததுக்காக மீண்டும் தலைகுனியுறேன். மீண்டும் தலைகுனியறேன்... கடவுளே! எனக்கு எப்போ அழைப்பு அனுப்பப் போறே? இனிமேல் நான் இருக்கிறது பாவம்! நீ என்னை இருக்க அனுமதிச்சால் நீயும் பாவிதான்... பாவிதான் (அழுகிறார்.)

**லியோ** : இப்ப ஏன் அழறீங்க?

**டால்ஸ்** : நான் எனக்காக அழலேடா... உனக்காக அழறேன்... நீ எதிர்காலத்துலே அழப்போறியேன்னு நினைச்சு இப்பவே அழறேன். டால்ஸ்டாயோட இளைய மகன் லியோ... அந்த மேதையைக் கொலை பண்ணப் போனானாம்னு வரலாறு சொல்லப் போகிறதேன்னு பெத்த பாசம் தாங்க முடியாம

அழறேண்டா... போடா... வரலாறுன்னு ஒண்ணு இருக்கிறதை மறந்துடாதே!

**லியோ** : எங்களுக்கு வரலாறு தேவையில்லை... உங்களோட டயரியும் நீங்க எழுதின எல்லாம் எங்களுக்கு வேணும்.

**டால்ஸ்** : அதுதாண்டா என் வரலாறு... அதைத் தாண்டா திருப்பியும் கேக்கறே...

**சோன்யா** : அந்த உயிலைப் பற்றியும் கேளுடா...

**லியோ** : உயிலை எங்க கண்ணுமுன்னாலேயே கிழிச்சு எறியணும்.

**டால்ஸ்** : என் உயிரைக் கிழிச்சாலும் கிழிப்பேனே தவிர உயிலைக் கிழிக்கமாட்டேன்.

**சோன்யா** : எல்லாம் அந்த செர்ட்கோவாலே வந்தவினை. அவனை நார் நாராய் கிழக்காட்டா என் மனசு ஆறாது! பாவிப்பயல்! நாசமாப் போற பயல்! போக்கிரிப்பய! என் குடியைக் கெடுக்க வந்துட்டானே!

*(தலையில் அடித்துக் கொள்கிறாள்.)*

**காஷா** : (சோர்வாக அமர்ந்திருக்கும் டால்ஸ்டாயை ஸ்டெதாஸ்கோப்பை வைத்துப் பார்க்கிறார்) மேடம் இவருக்கு பிரஷர் ஏறிக்கிட்டே போவுது. தயவுசெய்து பேச்சை நிறுத்துங்க. இல்லேன்னா... அவரு ஒரேயடியாய் பேச்சை நிறுத்தவேண்டியது வரும்.

**சோன்யா** : நீயும் சரியான கூட்டுக்கள்ளன்யா... ஏய்யா, நான் தலையில நோவும்படியா அடிச்சுக்கிட்டது

பெரிசாத் தெரியலே. அவரோட பிரஷர்தான் தெரியுதா? உன் மருந்தாலேயே என் புருஷனுக்கு நோய் வந்துட்டுது... நீ பேசினதாலேயே என் புருஷனுக்கு மூளை கலங்கிட்டுது...

**டால்ஸ் :** சோன்யா, நான் உன்னைக் கல்யாணம் செய்துக்கிட்ட பாவி! இந்தப் பாவிக்கு தண்டனை கொடு. அந்த அப்பாவியை அப்படிப் பேசாதே!

**சோன்யா :** இதுவா அப்பாவி? இது சரியான நரி! மருந்தைப்பற்றி தெரியாமலே மண்டைக் கனம் கொண்ட மனுஷன்! டாக்டராம் பொல்லாத டாக்டர்...

**டால்ஸ் :** உன்கிட்டே பேசி பிரயோஜனம் இல்லே. நான் இப்போ சொல்றதுதான் முடிவாச் சொல்றது... ஒன்று... செர்ட்கோவை இனிமேல் இந்த வீட்டுக்கு வர வேண்டாம்னு சொல்லிடறேன். இரண்டாவது, அந்த பாழாப்போன டயரியை உன்கிட்டேயே தந்துடறேன். மூணாவது, நீ உண்மையிலேயே நல்லவள்... அதனாலே உன்மீது இப்பவும் நான் வைத்திருக்கிற அன்பை உலகுக்குத் தெரியப்படுத்த ஒரு கட்டுரை எழுதித் தந்துவிடுகிறேன். இந்த மூணுக்கும் நீ சம்மதிச்சா நீயும் நம் மகனும்... மன்னிக்கணும் உன் மகனும் வெளியே போங்க... சமமதிக்கலேன்னா இங்கேயே இருங்க... நான் போயிடறேன்!

**சோன்யா :** அந்த உயிலு?

**டால்ஸ் :** அது என் உயிர். இந்த உயிரோட வேணும்னா அந்த உயிலையும் எடுத்துக்க.

**சோன்யா** : வாடா, இப்ப போவோம்... அப்பறமா பேசிக் கலாம்.

*(சோன்யாவுடன் லியோவும் போகிறான்.)*

**காஷா** : லியோ, என்னை உங்கள் மனைவி மேற்கொண்டு எதுவும் பேசிடப் போறாங்கன்னு பயந்து நீங்க இப்படி சலுகை கொடுக்கலாமா? உறுதிமொழி கொடுக்கக் கூடாதுன்னு உபதேசம் செய்யும் நீங்க உறுதி கொடுக்கலாமா? என் சுயமரியாதையைக் காப்பாற்ற உங்கள் மரியாதையைக் காற்றில் விடலாமா? உங்களுக்கு நர்ன் எப்படி பிரதி உதவி செய்றதுன்னே புரியலே!

**டால்ஸ்** : நான் புரிய வைக்கிறேன் செய்வியா?

**காஷா** : என்ன வேணும்னாலும் செய்யத் தயாரா இருக் கேன்.

**டால்ஸ்** : கொஞ்சம் விஷத்தைக் கொடு.

**காஷா** : அய்யோ... என் இயேசுவுக்கா இந்த கதி? என் புத்தருக்கா இந்த நிலைமை? என் நபிகளுக்கா இந்த தண்டனை?

*(செர்ட்கோவ் வருகிறார்.)*

**டால்ஸ்** : வா செர்ட்கோவ், வணக்கம்.

**செர்ட்** : குருவே... நீங்க வணக்கம் சொல்றதைப் பார்த்தா...

**டால்ஸ்** : நெருக்கமான நண்பர்கள் வணக்கம் சொல்ல மாட்டாங்கன்னு சொன்ன அதே வாயாலேதான் வணக்கம் சொன்னேன்!

**செர்ட் :** அந்நியோன்யமாக இருந்த என்னை... அந்நிய னாய் நினைச்சுட்டீங்களா?

**டால்ஸ் :** நினைக்கலே... நினைக்க வச்சுட்டாங்க!

**செர்ட் :** எனக்கு ஒன்றும் புரியமாட்டேங்குது!

**டால்ஸ் :** எனக்காக வாழ்நாளையே அர்ப்பணிச்ச என் மாணவனை, என் படைப்புகளில் ஒரு காசுகூட எடுக்காமல் என்னைப் பரவலாக்கிய என் நண்பனை, இயல்பிலேயே தன்மானம் உள்ளவனாய் இருந் தாலும், எனக்காக எத்தனை பேருடைய இழிமொழி களையும் சுமந்த என் மகனை... நான் இனிமேல் பார்க்கமாட்டேன்னு வாக்குக் கொடுத்துட்டேன்!

**செர்ட் :** உங்களை நான் பார்க்காமலிருக்க முடியாது! என்னைத் தடுக்க யாராலும் முடியாது... கடவுளே சொன்னாலும் கேட்க மாட்டேன்!

**டால்ஸ் :** செர்ட்கோவ், சொன்னபடி வாழாத இந்தக் கிழவன் எழுதினபடி வாழ்கிறவன் நீ. இட்டதைத் தட்டாமல் செய்யும் கர்மயோகி நீ... அப்பவும் இப்பவும்... எனக்கு நாக்கு வரமாட்டேங்குது...

**காஷா :** செர்ட்கோவ், அவருக்கு ஏதாவது ஆயிடப் போவுது. அவருக்காகவாவது...

**டால்ஸ் :** ஆமாம் செர்ட்கோவ், எனக்காக இந்தக் கிழவன் கொடுத்த வாக்கை நிறைவேற்ற உதவுவியா?

**சொர்ட் :** சரி, உங்கள் இஷ்டம். நான் வர்றேன்... நான்... நான், நீங்க இறந்தபிறகு உங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்காவது உயிர் வாழ்வேன்னு நம்பினேன், இப்போ இப்போ-யார் முதல்லே போகப் போறோமோ ஆண்டவனுக்கே வெளிச்சம்!

(சொர்ட்கோவ் திரும்பித் திரும்பிப் பார்த்து செல்கிறார்.)

**டால்ஸ் :** சொர்ட்கோவ்! இப்போ நீ போகல... என் உயிர்
போகுது... உயிர் போகுது...

*(துக்கம் தாளாமல் சாய்கிறார்.)*

# காட்சி - 6

*இடம் : டால்ஸ்டாயின் அறை.*

*நேரம் : காலை வேளை.*

*பாத்திரங்கள் : காஷா-டால்ஸ்டாய்—அலெக்ஸாண்ட்ரியா.*

*(டால்ஸ்டாய் சாய்ந்து படுத்திருக்க, டாக்டர் காஷா அவர் இதயத் துடிப்பை டெஸ்ட் செய்கிறார்.)*

**காஷா :** லியோ, இதயத் துடிப்பு திடீரென விழுந்திருக்கு... என்ன சாப்பிட்டீங்க?

**டால்ஸ் :** காஷா, சோன்யாவுக்கு என்ன வயசிருக்கும்?

**காஷா :** அறுபத்தி எட்டுன்னு நினைக்கிறேன்.

**டால்ஸ் :** அவளுக்கு 68. எனக்கு 89.

**காஷா :** என்ன லியோ சம்பந்தமில்லாம பேசறீங்க!

**டால்ஸ் :** சம்பந்தமாதான் பேசறேன். நேற்று ராத்திரி சோன்யா வந்தாள்... சொல்லவே வெட்கமாக இருக்கு... வெறுப்பாகவும் இருக்கு.

**காஷா :** சொல்லுங்க லியோ.

**டால்ஸ் :** வந்தவள்... கணவன் மனைவியா இருக்கணும்னு கேட்டாள்.

**காஷா :** அப்படித்தானே இருக்கீங்க.

**டால்ஸ்** : இன்னும் புரிஞ்சுக்கலே! என் இளமை வெறிக்கு... தன் இஷ்டத்துக்கு விரோதமாகக் கூட எனக்கு இன்பம் கொடுத்தவள்... நான் அவளை ஏமாற்றலாமா?

**காஷா** : அதுக்கு பைத்தியம் பிடிச்சிட்டுதுன்னு நினைக் கிறேன். கன்னத்துல அறையாமல் நீங்க என்ன லியோ... இப்போ நீங்க பண்ண அக்ரமத்துக்கு நான் அனுபவிக்கிறேன்... இந்த வயசிலயா... இப்படி யெல்லாம்...

**டால்ஸ்** : காஷா, டாக்டரா இருந்தும் மனோதத்துவம் தெரியாம பேசறீங்களே! அவளுக்குத் தேவை செக்ஸ் அல்ல. நான் அவளுக்கே சொந்தம் என்பதை காட்டத் துடிக்கும் ஒரு அடிமன உளைச்சல். நான் இன்னும் அவளோடு இருக்கிறேன் என்பதை அறியத் துடிக்கும் உளைச்சல். என் அந்தரங்கத்தை அவள் ஒருத்தி மட்டுமே பகிர்ந்துகொள்ள முடியும் என்ற அன்புரிமையை சந்தேக மனதுக்குக் காட்ட ஒரு சாட்சி... அவ்வளவுதான். மற்றபடி நாங்க ரெண்டு பேருமே மரக்கட்டைதான். செக்ஸ் ஒரு பிரச்சினை யில்லை. வெறுமையில் தோன்றும் அச்சம், தாயன்பைப் பெறாத வெறுமை இவையெல்லாம் செக்ஸ் பிரச்சினையாக வரும் என்பது டாக்டரான உங்களுக்குத் தெரியாதா? அவள் பிரச்சினையை அனுதாபத்தோட பார்க்கணும்.

**காஷா** : நான் அனுதாபத்தோட பார்க்கலாம். ஆனால் உடம்பு பார்க்குமா? எதுக்கும் ஒரு வயசிருக்கு... ஒரு வரம்பிருக்கு செக்ஸுக்கும்.

*(இருவர் பேச்சையும் கேட்டவாறு அலெக்ஸாண்ட்ரியா வருகிறாள்.)*

**அலெக்ஸ்** : என்னது ரெண்டு பேரும் கிசுகிசு பேசுறீங்க, செக்ஸைப்பற்றி இந்த வயசிலே உங்களுக்கென்ன பேச்சு... ம் என்ன... பேசினீங்க?

**காஷா** : அதுவந்து... அதுவந்து...

**அலெக்ஸ்** : நீங்க ரெண்டு பேரும் முழிக்கிற முழியைப் பார்த்தா--ஏதோ நடந்திருக்கு... சொல்லுங்க.

**டால்ஸ்** : அலெக்ஸாண்ட்ரியா, முதல் உயிலில் உன்னை மட்டும் டிரஸ்டியாய் போட்டேன். இப்பொ உன் அக்காள் டான்யாவையும் (Tanya) கோ-டிரஸ்டியா போட்டிருக்கேன். உனக்கு வருத்த மில்லையே?

**அலெக்ஸ்** : நான் லியோ டால்ஸ்டாயின் மகள் என்கிறதைவிட மாணவி என்பதில் பெருமைப்படுபவள். சும்மா வேணும்னு பேச்சை மாத்தாதீங்க.

**காஷா** : சும்மா நீ பாட்டுக்கு பேசிக்கிட்டே போகாதே!

**அலெக்ஸ்** : உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருது?

**டால்ஸ்** : காஷா, அலெக்ஸாண்ட்ரியாவிடம் சொல்லித் தான் ஆக வேண்டும். மகளே, நேற்று இரவு உனக்கு ஒரு தங்கையோ தம்பியோ பிறக்கறதுக்கு நானும் உன் அம்மாவும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தோம்... அவ்வளவுதான்... இதுக்கு மேலே எதுவும் கேட்காதே.

*(சிந்தனையோடு ஓரமாக சென்றவள், டாக்டரை நெருங்கி)*

**அலெக்ஸ்** : என்னப்பா இது... நீங்களுமா? டாக்டர், எனக்கு ஒண்ணும் புரியல. என் அம்மாவால் எங்கப்பாவுக்கு ஏதோ தீங்கு நேரிடப் போவுது. இதுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும்.

**டால்ஸ்** : நானே ஒரு முடிவுக்கு வந்துட்டேன். இனிமேல் இந்த வீட்டிலே என்னாலே இருக்க முடியாது. இன்னும் அவள் என்னை வேவு பாக்கிறதை விடலே. ராத்திரியிலேகூட திடீர் திடீர்னு வந்து எட்டிப் பார்க்கிறாள். உயிலு உயிலுன்னு உயிரை விடறா... என்னைக் கைதியா வைக்கணும்னு நினைக்கிறா... அதனாலே பலதடவை ஒத்திப் போட்ட என் பிரயாணத்தை நாளை துவங்குகிறேன், காஷா-நீங்களும் வர்றீங்களா? எங்கேயாவது ஓடி ஒளியணும் வர்றீங்களா?

**காஷா** : அதைவிட எனக்கு என்ன வேலை.

**அலெக்ஸ்** : நானும் வரேம்பா.

**டால்ஸ்** : வேண்டாம்மா. நான் போனது தெரிஞ்சதும் உன் அம்மாவுக்கு பைத்தியமே பிடிச்சாலும் பிடிச்சுடும். அவள் நல்லவள்... கெட்டவள் அல்ல. நல்லவளோ கெட்டவளோ... உனக்குத் தாய். காஷா, தயாரா இருங்க. சரியா காலையிலே நாலு மணிக்கு புறப்படறோம். அலெக்ஸாண்ட்ரியா, செர்ட்கோவிடம் தெரியப்படுத்திடு. மகன் ஸெர்ஜி (Sergi) கிட்ட சொல்லிடு. சரியா 4 மணி...

**அலெக்ஸ்** : அப்பா! (விம்மி அழுகிறாள்.)

# காட்சி – 7

**இடம்** : *தோட்டம்.*

**நேரம்** : *காலை 4 மணி.*

**பாத்திரங்கள்** : *டால்ஸ்டாய்-காஷா-அலெக்ஸாண்ட்ரியா.*

*(டால்ஸ்டாயும், டாக்டர் காஷாவும் கம்பிளிப் போர்வை அணிந்து கையில் ஒரு பாஸ்கட், அரிக்கன் லைட், டார்ச்சு லைட்டுடன் நிற்கிறார்கள்—அலெக்ஸாண்ட்ரியாவும் இருக்கிறாள்.)*

**டால்ஸ்** : காஷா.... சீக்கிரமா புறப்படுவோம். சோன்யா எழுந்திரிச்சு வந்துடப் போறாள்.

**காஷா** : நீங்கதான் மூணு கதவையும் பூட்டிட்டீங்களே. அப்புறம் எப்படி வர முடியும்?

**டால்ஸ்** : என் சோன்யாவின் அன்பு தாழை மீறியது. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்பது அவளுக்குப் பொருந்தும். ஆனா ஒரு சின்ன மாறுதல்-நான் அவளிடத்தில் அன்பு வைத்திருக்கிறேனா என்பதை பரிட்சித்துப் பார்க்க அவள் தன் அன்பை சந்தேகமாக மாற்றிவிட்டாள். அவள் சந்தேகம்தான் அன்பின் மறுவடிவம். இதில் எனக்கு சந்தேகமில்லை. சரி, என் தொப்பியைக் காணோமே... தொலைஞ்சு போச்சு...

**காஷா** : போனால் போகட்டும். இதோ என்கிட்ட ஒண்ணு இருக்கு.

**டால்ஸ்** : இருக்கட்டும்... பிறக்கும்போது தொப்பியோட பிறக்கலே... இறக்கும்போதும்...

*(அலெக்ஸாண்ட்ரியா டால்ஸ்டாயின் வாயைப் பொத்துகிறாள்.)*

**அலெக்ஸ்** : இன்னொரு தடவை அந்த வார்த்தையை சொல்லாதீங்கப்பா!

**டால்ஸ்** : குழந்தே! (தலையை வருடிக் கொடுத்துவிட்டு) காஷா புறப்படு...

**அலெக்ஸ்** : (விம்மிக்கொண்டே) எத்தனையோ பேர் உங்களைப் பார்க்க இங்கே ஓடி வருவாங்க... இப்போ நீங்களே இங்கிருந்து ஓடறீங்க...

**டால்ஸ்** : குழந்தே! நீ அழலாமா? இப்போ நீ சோன்யாவின் மகளல்ல... அவளுக்குத் தாய்... இதை மறந்துடாதே!

**அலெக்ஸ்** : இன்னும் அந்த ராட்சஸியை மறக்கலையா?

**டால்ஸ்** : நீ நினைக்கிற மாதிரி குடும்ப பந்தம் அவ்வளவு சுலபமானதல்ல! அவளை முதன் முதல் இந்த மரங்கள் மத்தியில்தான் தனிமையில் சந்தித்தேன். குதிரையில் ஏறுவதற்குத் தயங்கினாள். நான்தான் 'இங்கு மரங்கள் மட்டும்தான் உன்னைப் பார்க்கும். தைரியமாய் வா' என்றேன். அன்று... அப்படி நான் சொன்னதின் அர்த்தம் என்னவென்று புரிகிறது

இன்று... என் சோன்யாவை இனிமேல் மரங்கள் மட்டுந்தான் பார்க்கும்... டால்ஸ்டாய் பார்க்க மாட்டான்... இந்த டால்ஸ்டாய் பார்க்க மாட்டான்...

**அலெக்ஸ்** : அப்பா...

**டால்ஸ்** : மகளே, ஆரம்பத்திலே அவள் டயரியை நான் கேட்டேன்... மறுத்தாள். அதனால் எங்களுக்குள் காதல் பிறந்தது. இப்போ என் டயரியை அவள் கேட்டாள்... மறுத்தேன். அதனால் மோதல் வந்தது. என்ன வாழ்க்கை பார்த்தாயா!...

**காஷா** : நேரமாகிறது. லியோ, இப்ப போனால்தான் 'ஷ்சிகிநோ' (Shchekino) ஸ்டேஷனில் ரயிலைப் பிடிக்க முடியும்.

**அலெக்ஸ்** : அப்பா... இனிமேல் நான் உங்களைப் பார்ப் பேனா...

**டால்ஸ்** : அழாதம்மா. உனக்கு அடிக்கடி கடிதம் போடு றேன். 'நிகோலயீ' (Nikolayea) என்கிற பேரில் உனக்குக் கடிதம் வரும்... செர்ட்கோவ்கிட்டயும் சொல்லிடு... அம்மாகிட்ட மட்டும் என் இருப்பிடத்தைச் சொல்லிடாதே! எனக்கு உத்தரவு கொடுக்கிறி யாம்மா... அழாதேம்மா...

**அலெக்ஸ்** : போயிட்டு வாங்கப்பா...

*(டால்ஸ்டாயும், காஷாவும் சென்ற திசைநோக்கி கண்ணீர் விட்டு நிற்கிறாள் அலெக்ஸ்.)*

# காட்சி - 8

**இடம் :** *அஷ்டபோவ (Astapova) ரயில் நிலையம்.*

**பாத்திரங்கள் :** *டால்ஸ்டாய்—டாக்டர் காஷா—ஸ்டேஷன் மாஸ்டர் ஓஸோலின் (Ozolin).*

*(இருமிக் கொண்டிருக்கும் டால்ஸ்டாயை டாக்டர் காஷா கைத்தாங்கலாக அழைத்துவந்து பிளாட் பாரத்தில் படுக்க வைத்து இதயத் துடிப்பைக் கவனிக்கிறார்.)*

**காஷா :** நான் சொன்னதைக் கேட்டிருந்தா ஜுரம் அதிக மாயிருக்காது. கடவுளே!

**டால்ஸ் :** எந்தக் கடவுளைச் சொல்றியோ அந்தக் கடவுளை நான் நேருக்கு நேர் பார்க்கப் போவதற்கு ஆசிர்வாதம் பண்ணு... மருந்து கொடுக்காமல் உதவி பண்ணு.

**காஷா :** ஏதோ பத்து நாளிலே ஊருக்குத் திரும்பப் போகிறோம் என்ற எண்ணத்திலே நானும் நீங்க ஓடுறதுக்கு உடந்தையா இருந்துட்டேனே... எனக்கு என்ன பண்றதுன்னே புரியலே...

**டால்ஸ் :** நான்தான் செத்துக்கிட்டு இருக்கேன்னு பார்த் தால்... டாக்டருமா...?

**காஷா** : ஒப்ட்மா (Optma) மடத்திலே கண்டபடி சுத்திட்டீங்க. ரயிலிலே மூணாவது வகுப்பிலே பிரயாணம் செய்யாதீங்கன்னேன், கேட்கலே. அதோட மணிக்கணக்கா பிரயாணிகள் கிட்ட பேசிட்டீங்க. இப்ப பிரயாணத்தைத் தொடர முடியாம ஆயிட்டுது.

**டால்ஸ்** : எந்தப் பிரயாணத்தை? ரயில் பிரயாணத்தைத்தானே. காஷா... என் வாழ்க்கைப் பிரயாணம் இருக்கிறது வரைக்கும் நான் இந்தப் பிரயாணத்தைத் தொடர்ந்து ஆகணும். ரஷ்யாவுக்குள்ளேயே இருந்தால் எப்படியும் கண்டுபிடிச்சுடுவாங்க... அதனால...

**காஷா** : அதனால்தான் சொல்றேன்... பேசாமல் ஊருக்கு திரும்புவோம்.

**டால்ஸ்** : காஷா, ஏழு வயசிலே என் அப்பா, நான் ஒரு தப்பு பண்ணதுக்காக ஒரு மாடி அறையில் வச்சு பூட்டினார். நான் என் சுதந்திரத்துக்காக அங்கே இருந்த ஒரு ஜன்னல் வழியாக வெளியே குதித்தேன். இப்போதும் இந்த ஆன்மா இந்த உடம்பில் உள்ள ஒன்பது ஜன்னல்களில் ஒரு ஜன்னல் வழியாக குதிக்கிறது வரைக்கும் ஓயமாட்டேன். இந்த விடுதலையை விடமாட்டேன். நாம வெளிநாடு போகப் போகிறோம். ரஷ்ய வீட்டில் இருந்து இன்னொரு வீட்டுக்குப் போகப் போகிறோம்; வீடு கிடைக்கிற வரைக்கும் வீடு வீடாய் அலையப் போகிறேன் (இருமுதல்.)

**காஷா** : ஜுரம் ஏறிக்கிட்டே போகுதே... லியோ, படுங்க...

**ஓஸோ** : (வந்து) யார் நீங்க?

**காஷா** : இவரு வந்து... இவரு வந்து...

**டால்ஸ்** : நீங்க சும்மா இருங்க. தம்பீ, நீங்க யாரு?

**ஓஸோ** : நான் ஸ்டேஷன் மாஸ்டர் 'இவான் இவநோவிச் ஓஸோலின்' (Ivan Ivanovich Ozolin). இந்த அஷ்டபோவா (Astapova) ஸ்டேஷனுக்கு இன்சார்ஜ்... நீங்க யாரு?

**காஷா** : இவரு வந்து இவர்தான்... மிகப் பெரிய...

**டால்ஸ்** : மிகப்பெரிய 120ஆம் நெம்பர் ரயிலின் பிரயாணி. இது மட்டும் தெரிந்தால் போதும் (இருமுகிறார்.)

**காஷா** : ஸ்டேஷன் மாஸ்டர், இவர்தான் லியோ டால்ஸ் டாய்? பனில நனைஞ்சு இப்படி ஆயிட்டாரு. இவருக்கு தங்க இடம் கிடைக்குமா? இன்றைக்கு மட்டும்தான்.

**ஓஸோ** : என்ன! போரும் சமாதானமும் எழுதின புனித டால்ஸ்டாயா? பைபிளுக்கே புதிய அர்த்தம் கொடுத்து வாழ்க்கையின் அனர்த்தத்தை அர்த்தப்படுத்திய என் அபிமான டால்ஸ்டாயா? டாக்டர்--என் வீட்டுக்குப் போகலாம். லியோ பிரபு எழுந்திருங்க... எழுந்திருங்க பிரபு... படுத்துக் கிடந்த பாமர மக்களை எழுப்பிய என் குருவே நீங்க படுக்கக் கூடாது... எழுந்திருங்க.

*(அவரைத் தாங்கி எழுப்ப முயல்கிறான்.)*

# காட்சி 9

**இடம்** : *ஸ்டேஷன்மாஸ்டர் வீடு.*

**நேரம்** : *நள்ளிரவு.*

***பாத்திரங்கள்*** : *டால்ஸ்டாய்— டாக்டர் காஷா— ஸ்டேஷன் மாஸ்டர் ஓஸோலின்— அலெக்ஸாண்ட்ரியா— செர்ட்கோவ்— சோன்யா.*

*(டால்ஸ்டாய் மரணப்படுக்கையில் துடித்துக்கொண் டிருக்கிறார். டாக்டரும், ஸ்டேஷன்மாஸ்டரும் கவலையுடன் அமர்ந்திருக்கிறார்கள். 'ஹுறோ டால்ஸ்டாய் (Hurrah Tolstoy) டால்ஸ்டாய் வாழ்க' என்ற சத்தம் விண்ணதிரக் கேட்கிறது.)*

**டால்ஸ்** : காஷா, என்ன சத்தம்... ஒருவேளை எனக்குத் தான் அப்படிக் கேட்கிறதோ...

**காஷா** : இல்லை லியோ, லட்சக்கணக்கான பாமர மக்கள் உங்களைப் பார்க்கத் துடிக்கிறாங்க... போலீஸ்காரர் களாலே அவங்களைக் கட்டுப்படுத்த முடியலே... பல நாடுகளிலிருந்து பத்திரிகைக்காரர்கள் வேறு வந்திருக்காங்க.

**டால்ஸ்** : எப்போ அவங்களுக்கு க்ளைமேக்ஸ் நியூஸ் கிடைக்கும் காஷா?

**ஓஸோ** : லியோ... நீங்க அப்படியெல்லாம் பேசக்கூடாது.

**டால்ஸ்** : நான் மரணத்துக்குப் பயப்படலே ஓஸோலின்... என் சின்னப் பையனும் பெரிய மகளும் செத்தபோது

கூட துக்கத்தை அடக்கிக்கிட்டு மரணத்தை இனிமை யாகக் கற்பனை செய்தவன் நான். ஊருக்கு மட்டும் உபதேசியல்ல ஓஸோலின்.

*(கூட்டத்தினரை விலக்கிக்கொண்டு ஓடோடி வந்த அலெக்ஸான்ட்ரியா 'அப்பா' என்று டால்ஸ்டாயைக் கட்டிக்கொள்கிறாள்.)*

**அலெக்ஸ்** : அப்பா... பிளாட்பாரத்து மக்களைப் பற்றி எழுதின நீங்கள் ரயில்வே பிளாட்பாரத்துலே கிடந் தீங்களாமே... அப்பா உங்களுக்கா இந்த கதி...?

**டால்ஸ்** : அலெக்ஸான்ட்ரியா வா... விதி விசித்திரமான தம்மா. எனக்குரிய தண்டனை கிடைத்ததில் எனக்கு சத்தியமா சந்தோஷம்தாம்மா. பிளாட்பார மனிதர்கள் ரொட்டி வாங்கக்கூட காசில்லாம தவிச்சபோது போலித் தனமாய் புத்தகங்கள் எழுதி அவங்க ரொட்டி வாங்கற காசையும் புத்தகம் வாங்கும்படியா செய்தேன்... இப்படி பாமர மக்களின் பணத்தைப் பறிச்ச பாவி நான்.

**அலெக்ஸ்** : அப்படிச் சொல்லாதீங்க அப்பா. பாமர மக்களுக்கு அவர்கள் உணவை பறிப்பது யார்னு அடையாளம் காட்டிய மகான் நீங்க... இல்லையென் றால் இவ்வளவு ஜனங்க வந்து கூடியிருப்பாங்களா?

**டால்ஸ்** : சாகும்போதாவது என்னை தற்பெருமை இல் லாம சாகவிடம்மா. போகட்டும், அம்மா எப்படி இருக்கிறாள்?

**அலெக்ஸ்** : நீங்க எழுதி வச்சிட்டு வந்த கடிதத்தை படிச்சிட்டுக் கதறினா. எப்பப் பார்த்தாலும் 'லியோ,

லியோ'ங்கிற வார்த்தை தவிர வேறு எதையுமே பேசலே. அதைப் பார்த்த எனக்கே அழுகை வந் திட்டுது. ஜென்ம எதிரியா நினைச்ச செர்ட்கோவைக் கூட தன்னை மன்னிச்சுடும்படியா மன்றாடினாள்... அவளுக்கு இப்போ டயரி முக்கியமில்லே... ஏன் அவளே முக்கியமில்லே... நீங்கதான் முக்கியம்... அவள் உள்ளம் உடம்பு முழுவதும் நீங்கதான் வியாபிச்சிருக்கீங்க.

**செர்ட்** : என் பிரபுவே... என் குருவே...

*(செர்ட்கோவ் வருகிறார்.)*

**டால்ஸ்** : வா செர்ட்கோவ்... என்னை லியோன்னு கூப்பிடு... நான் உனக்கு வணக்கம் சொல்லலே... இதுலேயிருந்தே நீ எனக்கு அந்நியன் இல்லேன்னு தெரிய வேண்டாமா?

**செர்ட்** : நான் பாவி... நீங்க இந்த நிலைமைக்கு வர நானும் ஒரு காரணமாயிட்டேன்.

**காஷா** : செர்ட்கோவ் - ஏற்கெனவே அவருக்கு இதயத் துடிப்பு அதிகமா இருக்கு. அதைக் குறைப்பதற்கு பதிலா இப்படி அழுதால் எப்படி...?

**செர்ட்** : என் லியோவிற்கு என்ன மருந்து தேவைன்னு எனக்குத் தெரியும்... நீங்க எழுதின 'புனர்ஜன் மத்தை' மூடி (Moody) என்கிற வெள்ளைக்காரர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க உரிமை கேட்டிருக் கிறார்... 500 ரூபிள் தருவாராம்.

**டால்ஸ்** : ஆமாம்... என் படைப்புகளை அவர் பணம் தராமலேயே வெளியிடலாம். இருந்தாலும் நான் நம்ம

குடியானவர்களுக்கு தானியக் களஞ்சியம் வைக்கிறது கேள்விப்பட்டு பணந் தர்றேன்னு சொல்லியிருக்கார். கடிதம் போட்டுடு. பணத்தை சேரவேண்டிய இடத்தில் சேர்த்துடு. (இருமுகிறார்) நான் அந்தப் பணத்தைப் பார்க்குமுன்னால் போக வேண்டிய இடத்துக்குப் போயிடுவேன்.

**காஷா** : லியோ, எப்படியாவது ஊருக்குப் போயிடலாம்.

**டால்ஸ்** : இதோ இந்த ஓஸோலின்... நான் பெறாமல் பெற்ற என் மகன். என் மகன் வீட்டில்தான் நான் இருக்கிறேன்.

**ஓஸோ** : பிரபு... என்னை ஒரு பொருட்டாய் நினைத்து...

**டால்ஸ்** : ஓஸோலின்- க்ரிகோறி ஸ்கோவறாடா (Grigory Skovorada) எழுதின கவிதை தெரியுமா...?

'வாழ்வுக்கு வேண்டியவை எல்லாம் கஷ்டமில்லாமல் கிடைக்கும். கஷ்டமானவை எல்லாம் வாழ்வுக்கு வேண்டியதுமில்லை.'

'All that is needed is not difficult and
All that is difficult is not needed.'

இந்தக் கவிதைக்கு இலக்கணம் நீ! டால்ஸ்டாயில் இந்த ஓஸோலின் பெயர் தெரிவதைவிட... ஓஸோலினால் டால்ஸ்டாய் பெயர் தெரியணும். (இருமுகிறார்) செர்ட்கோவ் கடவுள் வணக்கம் படிக்கிறாயா? நான் சொல்றதை எழுதிக்கிறாயா...? என் சோன்யா எங்கே இருக்கிறாள்...?

**காஷா** : (அலெக்ஸாண்ட்ரியாவிடம் இரகசியமாக) அம்மா ரயில்வே கம்பார்ட்மெண்டில் இருக்கிறதை சொல்லிடாதம்மா... அப்பா உணர்ச்சிவசப்பட்டால் அவர் உயிரும் உணர்ச்சிவசப்படும்...

**டால்ஸ்** : என்ன இரகசியம்?

**காஷா** : ஒண்ணுமில்லெ... பேசாம இருங்க.

**செர்ட்** : நெஞ்சைத் தடவி விடட்டுமா?

**அலெக்ஸ்** : என் மடியிலே தலை வச்சிக்கிறீங்களா அப்பா!

**ஓஸோ** : குடிக்க ஏதாவது வேணுமா பிரபு?

**டால்ஸ்** : (வெறுமையாக) லியோ டால்ஸ்டாய்க்கு கால் பிடிக்க காஷா... உடம்பைப் பிடிக்க ஓஸோலின்... மடியில் கிடத்த மகள்... மடிவதைப் பார்க்க விரும்பாத செர்ட்கோவ்... என்னைத் திருத்துவதற்கு மதகுரு... போட்டோ கிராபர்கள்... பத்திரிகையாளர்கள்... (கோபமாக) இந்த ஒரு டால்ஸ்டாய்க்கு இத்தனை பேரா? இந்த உலகில் இலட்சோப இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். உண்ண உணவில்லாமல்... உடுக்க உடையில்லாமல்... இந்த ஒரு டால்ஸ்டாய்தான் உங்களுக்கு ஒசத்தியா? இவன்மட்டும்தான் உங்களுக்கு முக்கியமா?

(தணிவாக) தயவுசெய்து நான் சொல்றதைக் கேளுங்க... என்னை மத முறைப்படி அடக்கம் செய்யக்கூடாது... சமாதியை எழுப்பக்கூடாது... என்

சமாதி மண்ணாலேயே அமையணும்... நான் பாமரர்களுக்கும் பாமரன்... (இருமுகிறார்).

நான் கடவுளைப் பார்க்கப் போகிறேன்... கடவுள் கிட்டப் போகிறேன்...

செர்ட்கோவ்... கடவுள் வாழ்த்து படிக்கிறாயா...

என் சோன்யா...

காஷா... என் பிரயாணம்...

நான்... கடவுளை... பார்க்க... (தலைசாய்கிறது).

எல்லோரும் மௌனமாக இருக்க 'லியோ' என்ற குரல் ஒலிக்கிறது... சோன்யா விரைந்து வருகிறாள். டால்ஸ்டாயின் அருகில் சென்று முகத்தை உற்றுப் பார்க்கிறாள்- டால்ஸ்டாயின் நாடித்துடிப்பை பரிட்சித்துப் பார்த்துக்கொண்டிருந்த காஷா துக்கம் தாங்காமல் கண்ணீர் அரும்பிய கண்களுடன் காட்சியளிக்க- சோன்யா, காஷாவின் முகத்தை கேள்விக்குறியோடு பார்க்க காஷா தன் தலையில் அணிந்திருந்த தொப்பியை எடுத்துவிட்டு தலை குனிகிறார்... 'லியோ' என்று உரக்கக் கூச்சலிட்டவாறு சோன்யா நிலைகுலைந்து நிற்கிறாள்.

—திரை—

卐

கங்கை